


# இணையத் தணிக்கை மற்றும் உள்ளக்கங்களை வடிகட்டுதல் போன்றவற்றுக்கான தீர்வு காணல்.

சிவில் சமூக அமைப்புக்களுக்கான உத்திகளின் தொகுப்பு


தொகுத்து வழங்குவது

EngageMedia

இருந்து ஆதரவுடன்

GLOBAL NETWORK INITIATIVE

**EngageMedia** எங்கேஜ் மீடியா ஆனது டிஜிட்டல் உரிமைகள் மற்றும் திறந்த மற்றும் பாதுகாப்பான தொழிநுட்பத்திற்கான இலாபமற்ற மற்றும் சமுக பிரச்சினைகளின் ஆவணப்படுத்தல். காணொளிகள்,தொழிநுட்பம், மற்றும் வலையமைப்பு என்பவற்றினை ஒருங்கிணைத்து நாங்கள் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சுற்றுச்சூழல் போன்றவற்றுக்காக போராடும் அமைப்புகளாகிய ஆசிய பசிபிக் மற்றும் பூகோள மாற்றத்தினை கொண்டுவருபவர்கள் அமைப்பிற்கு ஆதரவளிக்கின்றோம். பல்வேறுபட்ட வலையமைப்புகள் மற்றும் சமுதாயங்களுடன் இணைந்து நாம் டிஜிட்டல் உரிமைகளினைப் பாதுகாத்தது முன்னேற்றி வருகின்றோம்.
மேலும் தெரிந்துகொள்ள engagemedia.org.

**The Global Network Initiative** பூகோள வலையமைப்பு முன்னெடுப்பானது தகவல் தொழிநுட்பம் துறையில் வெளிப்படுத்தல் சுதந்திரம் மற்றும் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்புகளை முன்னேற்றும் மற்றும் பாதுகாக்கும் இலாப நோக்கமற்ற அமைப்பாகும் . GNI ஆனது நிறுவனங்கள் தமது பயனாளர்களினுடைய வழங்குதல் , உள்ளடக்கங்களினை நீக்குதல் , அல்லது தொடர்பாடலினை தடைசெய்தல் போன்ற அரசாங்கத்தினுடைய அழுத்தங்களுக்கு முகம்கொடுக்கும்பொழுது நிறுவனங்களுக்கு அவர்களது வெளிப்படுத்தல் சுதந்திரம் மற்றும் தனியுரிமைகளினை மதித்தல் தொடர்பான உதவிகளினை வழங்குகின்றது. இந்த வலையமைப்பானது உலகிலுள்ள வளர்ந்துவருகின்ற இணைய மற்றும் தொலைத்தொடர்பு நிறுவங்களின் கூட்டிணைவு, மனித உரிமைகள் மற்றும் பத்திரிக்கைச் சுதந்திரக் குழுக்கள், முதலீட்டாளர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் போன்றவற்றினை உள்ளடங்கியதாகும்.

மேலும் தெரிந்துகொள்ள globalnetworkinitiative.org/.

# பொருளடக்கம்

அங்கீகாரங்கள் i
பொருளடக்கம் ii
பிராந்திய சூழமைவு 1
இந்த உத்திகளின் தொகுப்பு எதற்காக ? 2
**Section A:** இணையத் தணிக்கை மற்றும் உள்ளடக்க வடிகட்டல் என்றால் என்ன ? **4**
இணைய தணிக்கை என்றால் என்ன? 5
இது எவ்வாறு நடைபெறுகிறது ? 7
உள்ளடக்கங்களைத் தடைசெய்தல் 9
என்றால் ?என்ன 11
உள்ளீடு வடிகட்டல் என்றால் என்ன? 12
தணிக்கைக்கு பொறுப்பானவர்கள் யாவர் ? 13
**Section B:** இணையத் தணிக்கை மற்றும் உள்ளடக்க வடிகட்டலினை நீங்கள் எவ்வாறு தவிர்த்துக்கொள்ளலாம்? **15**
ஒரு மெய்நிகர் தனியார் வலையமைப்பு ஒன்றினை உபயோகித்தல். 16
பாதுகாப்பான ஒரு உலாவியினை உபயோகித்தல் 18
உங்களுடைய DNS வழங்குநரை மாற்றுதல் 20
ப்ரொக்சி சேவையினைப் பயன்படுத்தல் 20
**Section C:** எவ்வாறு நீங்கள் இணையத் தணிக்கை மற்றும் உள்ளடக்கத் தடை என்பவற்றினை கண்காணிக்கலாம்? **22**
OONI உடன் பங்காளிகளாதல் 23
தணிக்கையினை அளவிடும் செயலிகளினை உபயோகித்தல் 23
சோதனைப் பட்டியலைப் பயன்படுத்தல் அல்லது பங்களித்தல் 24

25 ஆய்வுப் பிரச்சினை : இணையக் கண்காணிப்புச் செயற்றிட்டம்

26 **Section D:** ஒரு திறந்த இணையத்துக்காக நீங்கள் எவ்வாறு வாதிட முடியும்**?**

27 இந்த அடிப்படையான கேள்விகளினை கேளுங்கள்

31 ஆய்வுக் கல்வி : மேற்கு பப்புவா

32 நியாயப்படுத்தியது .

32 பிரச்சாரத் திட்டத்தை வடிவமைத்தல்

33 ஏனைய குழுக்களின் ஆலோசனையினைப் பெறுதல்

34 பங்குதாரர்களினை கண்டறிதல்.

38 பங்குதாரர்களுடனான ஒன்றிணைவு

41 கவன ஈர்ப்பு : பூகோள வலையமைப்பு முன்னெடுப்பு

42 பிரச்சாரம் ஒன்றினை நிறைவேற்றல்

42 தாக்கத்தினை அளவிடுதல்

43 பிரச்சாரக் கதைகள்

46 தாக்கத்தினை அளவிடுவதற்கான ஒரு நினைவூட்டல்



# பிராந்திய சூழமைவு

தெற்கு மற்றும் தென்கிழக்காசியாவில் எதிர்ப்பினை இல்லாதொழிக்கவும் தகவல் சுதந்திரத்தினை மட்டுப்படுத்துவதற்குமான ஒரு கருவியாக இணையத் தணிக்கைகள் மற்றும் உள்ளடக்கங்களை வடிகட்டுதல் செயற்பாடானது காணப்படுகின்றது . இதுபோன்ற டிஜிட்டல் உரிமை மீறல்களானது இந்த பிராந்தியங்களில் குடியுரிமைக்கான இடைவெளிகளினை குறைப்பதில் பங்களிப்புச் செய்கின்றது . குறிப்பிடத்தக்க அண்மைக்கால நிகழ்வுகளாகிய பிலிப்பைன்ஸில் 2021 இல் சமூக- பயங்கரவாத குழுக்களுடன் இணைந்துள்ளது என்ற குற்றச்சாட்டின் பெயரில் முக்கிய முற்போக்கான வலைத்தளம் ஒன்றினை தடை செய்தமை 2023 இல் ஜனநாயகத்துக்கான குரல் (VOD) அமைப்பானது கம்போடியா அரசாங்கத்தினுடைய நன்மதிப்பு மற்றும் நட்பெயருக்கு எதிரான அதனது செயற்பாடுகள் காரணமாக 2023 இன் ஆரம்ப காலத்தில் நிரந்தரமாக மூடப்பட்டது .

இந்த நிகழ்வுகளைக் கருத்திலெடுத்து, எங்கேஜ் மீடியாவானது பூகோள வலையமைப்பு முன்னெடுப்பின் (GNI) அனுசரணையுடன், இணைய முடக்கம் மற்றும் உள்ளடக்கங்களினை வடிக்கட்டலினை நிவர்த்தி செய்யக்கூடிய வகையிலான உத்திகளினுடைய தொகுப்பு ஒன்றினை தொகுத்து வழங்கியுள்ளது . சிவில் நிறுவனங்கள் மற்றும் போராட்ட முன்னெடுப்புகளுக்கான இந்த உத்திகளின் தொகுப்பானது இணைய தணிக்கை மற்றும் உள்ளடக்கங்களினை வடிகட்டல் போன்றவற்றினை கடந்து செல்லவும் மற்றும் இல்லாதொழிக்க போராடவும் இதன் பங்காளர்களினை வலுவூட்டுகின்றது .

# இந்த உத்திகளின் தொகுப்பு எதற்காக ?

இந்த உத்திகளின் தொகுப்பின் நோக்கமானது சிவில் சமூக அமைப்புக்களுக்கு உதவிபுரிவதாகும் குறிப்பாக உள்ளூர் மனித உரிமைகள் நிறுவனக்களினுடைய அங்கத்தவர்களுக்கு மிகவும் திறந்ததான ஒரு இணையத்திற்கான போராட்டத்தினை வினைத்திறனாக மேற்கொள்வதற்கான குறித்த இணையத் தணிக்கை மற்றும் உள்ளடக்கங்களினை வடிகட்டல் என்பவற்றின் பிராந்திய கண்ணோட்டத்திலிருந்து நோக்குவதன் மூலம் மேம்பட்ட புரிதலைனைப் பெற்றுக்கொடுத்தலாகும் இந்த உத்திகளின் தொகுப்பானது இணைய தணிக்கை மற்றும் உள்ளடக்கங்களினை வடிகட்டல் தொடர்பான கையாளும்போது தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் சிவில் சமூக நிறுவனக்களினால் (CSOs) வழங்கப்பட்ட அனுபவங்கள் மற்றும் கதைகளின் முலம் தெரிவிக்கப்பட்டவற்றினைக்கொண்டு பூகோள வலையமைப்பு முன்னெடுப்பு நிறுவனத்தினுடைய அனுசரணையுடன் எங்கேஜ் மீடியா நிறுவனத்தினால் தொகுத்து வழங்கப்படுகின்றது .

இந்த உத்திகளின் தொகுப்பானது பின்வரும் பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது .

| | |
|---|---|
| பகுதி **A**<br>இணையத் தணிக்கை மற்றும் உள்ளடக்கங்களினை வடிகட்டுதல் என்பவற்றினுடைய வரைவிலக்கணம் | வரைவிலக்கணம், சூழமைவு மற்றும் தொடர்புடைய செயற்பாட்டுக்காரர்கள் தொடர்பாக கலந்தாலோசிக்கின்றது . குறித்த இணையத் தணிக்கை மற்றும் உள்ளடக்கங்களினை வடிகட்டல் என்பன பொதுவாக எவ்வாறு நடைமுறைப்படுத்தப் படுகின்றன என்ற தொழிநுட்ப ரீதியான பார்வையினையும் கலந்தாலோசிக்கின்றது . |
| பகுதி **B**<br>நிகழ்நிலை தணிப்பு மற்றும் உள்ளடக்க வடிகட்டல் என்பவற்றிலிருந்து வெளிவருதல் | நிகழ்நிலை தணிப்பு மற்றும் உள்ளடக்க வடிகட்டல் என்பவற்றிலிருந்து கடந்து செல்லக்கூடிய வேறு வழிமுறைகளில் கவனம் செலுத்துதல் . இது VPN மற்றும் Proxy சேவைகள் போன்ற குறிப்பிட்ட சில கருவிகளினை எவ்வாறு பயன்படுத்திடுதல் தொடர்பாக விபரிக்கின்றது; DNS வழங்குநர்கள் மற்றும் பாதுகாப்பான உலாவியை அடையாளம் காணுதலும் தெரிவுசெய்தலும் மற்றும் DigiSec Directory இல் காணப்படும் மேலதிக தகவல்களுக்கு உங்களை இட்டுச் செல்கிறது |

| | |
|---|---|
| பகுதி **C**<br>நிகழ்நிலைத் தணிக்கை மற்றும் உள்ளடக்க வடிகட்டல் என்பவற்றைக் கண்காணித்தல் | நிகழ்நிலைத் தணிக்கை மற்றும் உள்ளடக்க வடிகட்டல் என்பவற்றைக் கண்காணிக்க வலையமைப்பு தலையீடுகளுக்கான திறந்த கண்காணிப்புடன் பங்காளர்களாக இணைத்தல் (OONI) மற்றும் வலைத்தளங்களுக்கான பரீட்சார்த்த பட்டியலினை உருவாக்குதல் மற்றும் / அல்லது பங்களித்தல் போன்ற வழிமுறைகளினை விபரித்தல் . பாடங்களினைக் கற்றுக்கொள்ளக்கூடிய வெற்றிகரமான கதைகளினையும் இது வழங்குகின்றது . |
| பகுதி **D**<br>இலவச இணைய வசதிகளுக்காக குரல்கொடுத்தல் | இலவ இணையத்திற்கான குரல்கொடுக்கும் முன்னெடுப்பு ஒன்றினை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்றது . உள்ளூர் சூழமைவுகளில் ஒரு நிகழ்வினை எவ்வாறு கட்டியெழுப்பல் மற்றும் பிரதான செய்தியினை தீர்மானித்தல்; இணைய நிர்வகிப்புகளுடன் தொடர்புடைய பங்காளர்களினை அடையாளம் காணுதல்; குறித்த பங்குதாரர்களுடன் இணைந்து செயற்படுதல்; மற்றும் முன்னெடுப்பினுடைய வெற்றியினளவினை அளந்துகொள்ளுதல், அதனை முன்னேற்றக்கூடிய வழிமுறைகளினை கண்டுகொள்ளுதல் போன்றவற்றுக்கான வழிகாட்டலினை குறித்த வழிகாட்டியானது வழங்குகிறது . |



# இணையத் தணிக்கை மற்றும் உள்ளடக்க வடிகட்டல் என்றால் என்ன ?



# இணைய தணிக்கை என்றால் என்ன?

இணையத்தில் காணப்படும் அணுகக்கூடிய, உருவாக்காக்கூடிய அல்லது பார்க்கக்கூடிய ஒரு விடயத்தினை கட்டுப்படுத்தல் அல்லது தடைசெய்தல் இணையத் தணிக்கையாகும். குறித்த செயன்முறையானது குறிப்பாக சர்வாதிகார அரசாங்கங்களைக் கொண்டுள்ள நாடுகளில் உலகலாவிய ரீதியில் மக்களது வெளிப்படுத்தல் சுதந்திரத்தில் கணிசமான அளவு பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கின்றது . தூண்டல்கள் தமது சட்டபூர்வமான தன்மையயுடன் வேறுபடுவதுடன் பல்வேறுபட்ட காரணிகள் இந்த இணைய தணிகையினை கொண்டுஇயக்குகின்றன . சராசரியான தணிக்கை அளவீடுகளும் கொள்கைகளும் பதிப்புரிமை பெற்ற மற்றும் ஆபத்தான ஆக்கங்களினை பயன்படுத்துவதனை தடுப்பதற்காகவே காணப்படுகின்றன . எவ்வாறிருப்பினும் , பொதுமக்களினுடைய எண்ணப்பாடுகளினை கையாளவும், அரசியல் எதிர்ப்பினை அடக்கியாலவும் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதனைக் கட்டுப்படுத்தவும் குறித்த கொள்கைகளினை அதிகாரிகள் பயன்படுத்திக் கொண்ட சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன . உதாரணமாக பலநாடுகள் கோவிட் -19 போதான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செய்தி வடிகட்டல் மற்றும் மியன்மாரில் ரொஹிங்கியாக்கு எதிராக கட்டமைக்கப்பட்ட வெறுப்பு பேச்சுக்கள் என் அவற்றைக் குறிப்பிடலாம்.

இணையத் துண்டுபடுத்தலானது தணிக்கையினை அமுல்படுத்தவும், நிகழ்நிகை கட்டுப்பாட்டினை உருவாக்கவும் அரசாங்கங்கள் பயன்படுத்தும் ஒரு முறைமையாகும் . குறித்த துண்டுபடுத்தலானது 2016 ம் ஆண்டு உலக பொருளாதார அமைப்பின் இணைய துண்டுபடுத்தலில் மேற்கொண்ட ஆய்வுகளில் வரையறுக்கப்பட்டதனைப் போன்று மூன்று வித்தியாசமான வழிமுறைகளில் மேற்கொள்ளப்படலாம் .

1. தொழிநுட்ப துண்டாடல் ; இது இணையத்தின் உட்கட்டமைப்பானது வெவ்வேறுபட்ட அமைப்புகளினை இணைக்கவோ அல்லது தகவலைனைப் பகிர்ந்துகொள்ளவோ கடினமாக காணப்படுவதாகும்.
2. அரசாங்க துண்டாடல், இது தடை சட்டங்கள் மூலம் தகவல்களினை அணுகுவதனை மட்டுப்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது ;
3. வணிகத் துண்டாடல்; இணைய பயன்பாடு மற்றும் தகவல் பரிமாற்றத்தினை கட்டுப்படுத்தக்கூடிய வணிகச் செயற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்படுவதாகும் .

இந்த தந்திரமான அணுகுமுறையானது நிகழ்நிலையிலுள்ள உள்ளடக்கங்கள்மீது மிகவும் வினைத்ததிறனான கட்டுப்பாட்டினை விதிக்கின்றது . அபாயகரமான போக்குகளானவை தேசிய அரசாங்கங்கள்வன்முறையற்ற அரசியல் , சமூக அல்லது மதம் சார் உள்ளடக்கங்களைக் கொண்ட வலைத்தளங்களை தடைசெய்வதனை குறித்துக் காட்டுகின்றன குறித்த செயற்பாடுகளானது ஒரு தனி நபருடைய வெளிப்படுத்தல் சுதந்திரம் மற்றும் தகவல் உரிமையினை நேரடியாகவே குறை மதிப்பீடு செய்கின்றது . இதன் விளைவாக உலகளாவிய இணையச் சுதந்திரமானது கடந்த தொடர்ச்சியான மறுதலிப்பினை கண்டுள்ளது, சீர்குலைந்துகொண்டிருக்கும் நிகழ்நிலை மனித உரிமை சூழலினை மேலும் மோசமாக்குகின்றது . இந்த அபிவிருத்திகளானவை உலகளாவிய ரீதியில் நிகழ்நிலையில் தகவல்களை அணுகுதல் மற்றும் வெளிப்படுத்தலில் மட்டுப்பாடுகளை விதித்தல் மற்றும் தனிநபர் உரிமைகளில் தொடர்ச்சியான தாக்கங்களையும் ஏற்படுத்தக்கூடிய அச்சத்தினையும் உருவாக்கியுள்ளன .

இணைய தணிக்கையின் தொழிநுட்ப ரீதியான பார்வையினைப் பற்றித் தெரிந்துகொள்ள EngageMedia.org

# இது எவ்வாறு நடைபெறுகிறது ?

உள்ளூர் வலையமைப்புகள் , இணையச் சேவை வழங்குநர்கள் (ISPs) மற்றும் தொடர்பாடல் சேவை வழங்குநர்களின் (TSPs) மேலான நகர்வானது இணைய தணிக்கையில் மிகவும் பங்கினை வகிக்கின்றது . ஒரு குறித்த வலைத்தளத்தினை அல்லது முழு இணையத்தினையும் தடை செய்யும் அவர்களிடம் காணப்படுகின்றது , பயனாளர்கள் எதனை அணுகமுடியும் என்பதில் அரசாங்கத்துக்கு விரிவான கட்டுப்பாட்டினை வழங்குகின்றது . மேலதிகமாக, அவர்கள் இணையத்தினை முடக்கலாம் , குறிவைக்கப்பட்ட நிகழ்நிலைச் சேவையினை அல்லது செயலியின் வேகத்தினை மட்டுப்படுத்தலாம் .

மேலும் , அரசாங்கமானது ISP மற்றும் TSP சட்டங்கள் மற்றும் விதிகளினைக் கொண்டு அவர்கள் சார்இனாரிடம் பில் தணிக்கையினை மேற்கொள்ளுமாறு அழுத்தங்களைச் செலுத்தலாம் . இதன்மூலம் சில உள்ளீடுகளுக்கான அணுகலைத் தடுக்கலாம் அல்லது இணையத்தினை முடக்கும் கட்டளையினை ஆக்கலாம் . கட்டாயப்படுத்தப்படும்பொழுது , இணையத் தணிப்பினை அமுல்படுத்த ISP கீழே காட்டப்படும் முறைகளில் ஒன்றை பிரயோகப்படுத்தலாம் :

| | |
|---|---|
| அடிப்படைக் கட்டமைப்பு முடக்கல் | இணையச் சேவைக்கு அவசியமான பௌதீக தொடர்பாடல் கட்டமைப்புக்குச் சேதம் ஏற்படுதல் அல்லது செயலிழத்தல் . உதாரணமாக தொலைத்தொடர்பு கோபுரம் அல்லது மின்பிறப்பாக்கியில் ஏற்படும் பௌதீக சேதங்கள். |
| மாற்று வழிச்செலுத்தல் | முக்கியமான புள்ளிகளில் வலையமைப்பினுடைய வழித்தட தகவல்களினை மாற்றம் செய்வதன் மூலம் வலையமைப்பின் அன்றாட செயற்பாட்டினை கையாளுதல் (உதாரணமாக, சர்வதேச நுழைவாயில்கள் ) எனவே குறித்த வலையமைப்புக்கான தகவல் பரிமாற்றங்கள் தடைசெய்யப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்பினை தாண்டி தகவல்கள் பரிமாறப்பட்ட மாட்டாது . |

| | |
|---|---|
| DNS கையாளுகை | ஒரு பயனாளியினை இல்லாத ஒரு சேவகத்துக்கு அல்லது குற்றவாளியினால் கட்டுப்படுத்தப்படும் ஒரு சேவகத்துக்கு திருப்புவதற்காக இயந்திரத்தினால் வாசிக்கக்கூடியதாகவுள்ள IP addresses இனை (142.251.32.46 போன்றவை ) மனிதர்கள் வாசிக்கக்கூடியவாறான டொமைன் பெயர்களாக ( google.com போன்றவை) மொழிமாற்றம் செய்கின்ற DNS பெயரிடல் அமைப்பினை கையாளுதல் . |
| வடிகட்டுதல் | வலையமைப்பு தகவல் போக்குவரத்திலுள்ள கருவித் தகவல்களை பகுப்பாய்வு செய்து பின்னர் அந்த தகவலின் அடிப்படையில் கருவித் தகவலை தடை செய்தல் அல்லது அனுமதித்தல் மூலமாக இணையச் அணுக்கலினை தடைசெய்ய வணிக வடிகட்டல் உத்திகள் மற்றும் வெளிப்படையான ப்றொக்சியினைப் பயன்படுத்தல் |
| ஒடுக்குதல் | சேவை அல்லது வளங்களினை உபயோகிக்க முடியாத வகையில் வலையமைப்பினூடாக தரவுப் பாய்ச்சலினைக் கட்டுப்படுத்தல்; உதாரணமாக, மொபைல் இணையத்தினை 2G ஆக மாற்றுதல் அல்லது தரவுகளின் வேகத்தினை மட்டுப்படுத்தல் . |
| ஆழமான தரவுப் பொட்டலப் பரிசோதனை | வலைத்தள தரவுகளினை பரிசோதனை செய்து ஆய்வுசெய்தல். குறித்த தரவுப் பொட்டலமானது முடக்கல் குற்றம் செய்பவரால் நிறுவப்பட்ட நிபந்தனைகளுடன் ஒத்திசைவதாக காணப்படாத பட்சத்தில் குறித்த தகவல் பொட்டலமானது ஆய்வுப்புள்ளியினைத் தாண்டுவதிலிருந்து தடை செய்யப்படும் . |
| சேவை மறுப்புத் தாக்குதல் (DoS) | குறித்த தளத்தடுக்கு அல்லது சேவகத்துக்கு அதனை தொழிற்பாட்டுடன் வைத்திருக்கவும் பயனாளிகளுக்கு தகவல் தகவல் வழங்குவதனைத் தடுக்கவும் கூடிய வகையில் போலியான தகவல்களை குறிவைத்து அனுப்புதல் |

இறுதியாக, உள்ளடக்கங்களை தேடுவதற்கான அடைப்படைக் கருவியாகக் காணப்படுகின்ற தேடுதல் பொறிகள் கூட மற்றும் உள்ளடக்க வடிக்கட்டலுக்கு உட்படலாம் . குறிப்பிட்ட சில விசாரணைகளினை தடை செய்யவும் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுபேறுகளினை மட்டும் காண்பிக்கக்கூடிய வகையில் தேடுதல் பெறுபேறுகளை கையாளவும் அரசாங்கங்கள் தேடுதல் பொறிகளை பணிக்கலாம்.

# உள்ளடக்கங்களைத் தடைசெய்தல் என்றால் ?என்ன

தடை செய்தலானது பொதுவாக கருப்பு பட்டியலிடப்பட்ட வலைப்பக்கங்கள், டொமைன்கள் , IP முகவரிகள், நெறிமுறைகள் அல்லது சேவைகளுக்கான அணுகலினை தடுக்கின்ற செயற்பாட்டினைக் குறிக்கின்றது . சட்டத்தின் தன்மையின் அடிப்படையில் தடை செய்வதற்கான நியாயப்படுத்தலானது பெரும்பாலும் சட்டவிரோத உள்ளடக்கங்கள் , பொது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் உள்ளடக்கங்கள் அல்லது குறிப்பிட்ட சில வகையினரினால் ஆட்சேபிக்கத்தக்கதான உள்ளடக்கங்களின் அணுகலினைத் தடை செய்தல் போன்றனவாகக் காணப்படும் .

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் இணையத் தடையானது வலைத்தள தடை , உள்ளீடுகள் மட்டுப்பாடு , மற்றும் இணைய கண்காணிப்பு போன்ற முறைப்பாடுகளுடன் மிகவும் கவலைக்குரியதாகக் காணப்படுகின்றது . iMap: இன் அடிப்படையில் இணையத் தணிக்கை அறிக்கை 2022 ஆனது தென்கிழக்கு ஆசியாவின் 8 நாடுகளினை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டது, இதன்படி செய்தி, ஊடகம் , மற்றும் மனித உரிமைப் பிரச்சினைகள் சார்ந்த வலைத்தளங்கள் அதிகமாக தடைசெய்யப்பட்டுள்ளன. இவற்றில் 4% வலைத்தளங்கள் அணுகமுடியாதவையாகவுள்ளது (முறையற்ற மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட தடைகள் ). தென்கிழக்கு ஆசிய அரசாங்கங்களானது தேசிய பாதுகாப்பு மற்றும் நிகழ்நிலைக் கொள்ளை உட்பட, இவற்றுடன் மட்டுமல்லாது பல்வேறுபட்ட காரணங்களுக்காக வலைத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்களினை தடைகளை விதிப்பவர்களாக அறியப்பட்டுள்ளனர் . குடிமக்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமைக் காப்பாளர்கள் போன்றோர் மேல் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடிய வகையிலான பல்வேறு சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

2022 இன் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய டிஜிட்டல் உரிமைகள் பள்ளியினைத் தொடர்ந்து, பங்களாதேஷ் மற்றும் பிலிபைன்சைச் சார்ந்த பிரதிநிதிகள் தமது அரசாங்கங்கள் எவ்வாறு ஏலவே காணப்பட்ட தணிக்கை தொடர்பான சட்டதிட்டங்களை தமக்கெதிரான விமர்சனகளுக்கெதிராகப் பயன்படுத்தினர் என்பது தொடர்பாக எழுதியிருந்தனர் . மேலும் தெரிந்துகொள்ள EngageMedia.org

# உள்ளீடு வடிகட்டல் என்றால் என்ன?

உள்ளடக்க வடிகட்டல் மற்றும் தடைசெய்தலானது சில நிபந்தனைகளினை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை அணுகுவதனை தடைசெய்யும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட செயற்பாடுகளாகும் . தடைசெய்தலானது முழு வலைத்தளத்தினை அல்லது IP முகவரியினை தடைசெய்யும் அதேவேளை உள்ளதுடக்க வடிகட்டலானது தகவல்கள் பரிமாறப்படுகின்ற முறைகள் , நெறிமுறைகள் , அல்லது முக்கிய சொற்கள் அல்லது பொருத்தமற்ற அல்லது சட்டமுரணானது என உணரப்பட்ட உள்ளீடுகள் போன்ற குறிப்பிட்ட சில பண்புகளைக்கொண்டு வலைப்பக்கங்களை தடைசெய்கின்ற தொழிநுட்பத்தின்மேல் கவனம் செலுத்துகின்றது .

இந்த அணுகுமுறையானது அதிகாரிகள் முழுமையான தடையினை விரும்பாத எனினும் குறிப்பிட்ட சில உள்ளடக்கங்களை தடைசெய்ய விரும்புகின்ற நேரங்களில் பயன்படுத்தப்படிக்குன்றது . வலைத்தளம் , மின்னஞ்சல் , அல்லது துரித செய்தி சேவைகள் போன்ற டிஜிட்டல் தொடர்பாடல்களுடைய உள்ளடக்கங்களை பகுப்பாய்வு செய்ய உள்ளடக்க வடிகட்டலானது மென்பொருள் அல்லது வன்பொருள் தீர்வுகளைப் பயன்படுத்துகின்றது . இந்த தீர்வுகளானது தகவல்கள் பரிமாறப்படுகின்ற முறைகள் , நெறிமுறைகள் , அல்லது முக்கிய சொற்கள் அல்லது பொருத்தமற்ற அல்லது சட்டமுரணான விடயங்களுடனான அதனது தொடர்பு போன்ற குறிப்பிட்ட சில காரணிகளின் அடிப்படையில் குறித்த நிபந்தனையினை உள்ளடக்கம் பூர்த்தி செய்கின்றதா இல்லையா என்ற அணுகுவதற்கான பகுப்பாய்வினை மேற்கொள்ளும் . இந்த அணுகுமுறையானது குறித்த சில அதிகார எல்லைக்குள் காணப்படும் பயனாளர்களுக்கு சட்டவிரோதமான , பொது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானது , அல்லது ஆட்சேபிக்கத்தக்கது எனத் தோன்றும் தகவல்களின் அணுகல்கல்களைத் தெரிவுசெய்து கட்டுப்படுத்துவதற்கு அனுமதிக்கின்றது .

உள்ளமைவுகளின் அடிப்படையில் வடிகட்டப்பட்ட உள்ளடக்கங்களானது ஒருமித்து தரவேற்றப்படுவது தடுக்கப்படலாம். பயனாளிகள் மாற்று உள்ளடக்கம் ஒன்றிற்கு திருப்பப்படலாம் அல்லது அணுகல் தடைசெய்யப்பட்டமைக்கான எச்சரிக்கை செய்திகளினைப் பெறலாம் .



# தணிக்கைக்கு பொறுப்பானவர்கள் யாவர் ?

இணைய தணிக்கையினை அமுல்படுத்தி நடைமுறைப்படுத்துவதில் தேசிய அரசாங்கங்கள் முக்கியமான ஒரு பங்கினை வகிக்கின்றன. நிகழ்நிலையிலான உள்ளடக்கங்களை கண்காணிக்கவென ஒழுங்குபடுத்தல் அமைப்புகள் அல்லது சிறப்பு முகவர்களை அவர்கள் உருவாக்கலாம்.

உளவு மென்பொருட்கள் மற்றும் தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி நிகழ்நிலைச் செயற்பாடுகளை கண்காணித்தல் மற்றும் வெறுப்பு பேச்சு மற்றும் வதந்தியினை பரப்புதலினை எதிர்த்து போராட சில வலைத்தளங்களை மற்றும் சமூக ஊடகங்களை அவ்வப்போது முடக்கி வைத்தல் அல்லது தணிக்கை செய்தல் உட்பட பேச்சு சுதந்திரம் மற்றும் தனியுரிமைகள் மீதான அரசாங்கத்தினுடைய கண்காணிப்பு மற்றும் மட்டுப்படுத்தல் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன .

வருந்தும் விதமாக, நிகழ்நிலையில் ஏற்படும் குற்றங்களினைத் தடுப்பதை நோக்கமாகக்கொண்டு நாடுகளினால் இயற்றப்படும் சட்டங்களானது அரசினையும் அதன் தலைவர்களையும் விமர்சிக்கும் தனிநபர்களினைத் தண்டிப்பதற்காகவே பயன்படுத்தப்படுகின்றது. பங்களாதேஷில் 2018 அக்டோபரில் கொண்டுவரப்பட்ட டிஜிட்டல் பாதுக்காப்பு சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட உரிமைகளுக்கான குழுக்களினால் குறித்துக்காட்டப்பட்டதனைப்போன்று



# தணிக்கைக்கு பொறுப்பானவர்கள் யாவர் ?

தேசிய சின்னங்கள், மத நம்பிக்கைகள், மற்றும் சமுதாய நல்லிணக்கம் என்பன குறித்து தமது கருத்துக்களை வெளிப்படுத்துவார்கள் மேல் தண்டனைகளைனை விதிக்கும் இறுக்கமான இணையச் சட்டமானது அமைதியான விமர்சனக்காரர்களினை குற்றவாளிகளாக நடத்தும் துரசிடவசமான நிலைக்கு ஒரு உதாரணமாகும் .இணைய தணிக்கை செயற்பாடுகளினை நடைமுறைப்படுத்துவதில் இணையச் சேவை வழங்குநர்கள் மற்றும் சமூக வலைத்தள உரிமையாளர்கள் முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர் . பயனாளர்களால் உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்களைக் கொண்ட சமூக மற்றும் ஏனைய வலைத்தளங்கள் அவர்களது நாட்டில் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களிற்கு அல்லது அவர்களது விதிமுறைகளின் ஒரு பகுதியாகவோ உள்ளடக்க முறைப்படுத்தல் அளவீடுகளினைச் செயற்படுத்துகின்றன .

பெரிய மற்றும் நன்கு நிறுவப்பட்டுள்ள முகப்புத்தகம் மற்றும் கீச்சகம் போன்ற நிறுவனங்கள் நிகழ்நிலையில் காணப்படும் போலியான தகவல் மற்றும் வெறுப்பு பேச்சு என்பவற்றின் அதிகரிப்பினைத் தடுக்கும் வகையிலான உள்ளடக்க முறைப்படுத்தல் அளவீடுகளினை தமது நிறுவனக் கொள்கைகளில் உள்வாங்கியுள்ளனர். இந்த அளவீடுகளானவை, உண்மை - கண்டறிதல் அளவீடுகள் , எச்சரிக்கை குறிகள் மற்றும் விஞ்ஞான ரீதியான, நம்பத்தகுந்த தகவல்களுக்கு வழிப்படுத்தலஎன்பனவற்றினை உள்ளடக்கும் .



# தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய சட்டம் மற்றும் கொள்கைகளில் தணிக்கை

மியான்மாரினுடைய இணைய பாதுகாப்புச் சட்டமானது
வழங்குநர்கள் சில வலைத்தளங்களினை தடைசெய்ய கட்டளையினை வழங்குவதற்கான அதிகாரத்தினை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளது .

தாய்லாந்தினுடைய கணனிக் குற்றங்கள் சட்டமானது
விரும்பத்தகாத நிகழ்நிலை உள்ளடக்கங்களுக்கான அணுக்களை மட்டுப்படுத்தும் அல்லது தடை செய்யும் அனுமதியினை அரசாங்கத்திற்குவழங்குகின்றது .

கம்போடியாவினுடைய தேசிய இணைய வெளியேற்றத் துணை-ஆணையானது
அனைத்து விதமான இணைய தகவல் பரிமாற்றங்களும் அதனது பயனாளியினை அடைவதற்கு முன்னர் நிகழ்நிலைச் செயற்பாடுகளினைக் கண்காணிக்கும் ஒழுங்குபடுத்தல் அமைப்பினூடாகவே அனுப்பப்படல் வேண்டும் எனத் தேவைப்படுத்துகிறது .

பங்களாதேஷினுடைய தேசிய தொலைத்தொடர்புக் கண்காணிக்கும் நிலையமானது
இணையத்தில் காணப்படும் குற்றவியல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் உள்ளடக்கங்கள் மற்றும் அரசுக்குஎதிரான பரப்புரைகள் என்பவற்றினை தடைசெய்யும் அல்லது வடிகட்டும் " உள்ளடக்க தடைசெய்தல் மற்றும் வடிகட்டல் அமைப்பினை" நடைமுறைப்படுத்துகின்றது .

# இணையத் தணிக்கை மற்றும் உள்ளடக்க வடிகட்டலினை நீங்கள் எவ்வாறு தவிர்த்துக்கொள்ளலாம்?



உங்களுடைய ISP மூலமாகவோ அல்லது அரசாங்கத்தினாலோ வேலையில், வீட்டில் இணையத் தணிக்கைக்கு உட்படுவீர்களெனில் அவற்றிலிருந்து மிகவும் சுதந்திரமான நிகழ்நிலையினைப் பெற்றுக்கொள்ள பல்வேறு வழிமுறைகள் காணப்படுகின்றன. சில தீர்வுகளானது இலவசமாகக் காணப்படும் அதேவேளை ஏனையவை கட்டணம் செலுத்தப்பட வேண்டியவையாகக் காணப்படுகின்றது, அவை அனைத்துமே அமைக்க இலகுவானது மற்றும் தணிக்கைக்குட்படுவதிலிருந்து உங்களது பாதுகாப்பினை கணிசமானளவு அதிகரிக்கும் .

## 1. ஒரு மெய்நிகர் தனியார் வலையமைப்பு ஒன்றினை உபயோகித்தல்.

ஒரு மெய்நிகர் தனியார் வலையமைப்பானது (VPN) உங்களது சாதனத்துக்கும் VPN சேவகத்துக்குமான மறைக்குறியாக்கப்பட்ட பாதையினை உருவாக்குகின்றது . உங்களது DNS கோரிக்கைகள் மற்றும் ஏனைய இணைய தகவல் பரிமாற்றமானது பின்னர் VPN சேவகத்தினூடாக அனுப்பப்படும் , இது உங்களது ISP ஆனது உங்களை தனிப்பட்ட முறையில் அடையாளம் காணப்படுவதனை சாத்தியமற்றதாக்கும் . இதனைச் செய்வதன் மூலம், உங்களது ISP ஆனது நீங்கள் அணுக எத்தனிக்கும் வலைப்பக்கத்தினை அடையாளம் காணமுடியாது போகும் அல்லது தடைகளை மேற்கொள்ள முடியாதுபோகும். பின்னர் குறித்த உள்ளடக்கம் அல்லது சேவையினை தடைசெய்யாத நாடு ஒன்றிலுள்ள ஒரு சேவகத்திற்கு இணைப்பை ஏற்படுத்தும் .

பல தரப்பட்ட வகையான இலவச மற்றும் கட்டணம் செலுத்தப்பட்ட VPN கள் பாவனைக்கு காணப்படுகின்றன . இவற்றில் ஒன்றினை நீங்கள் பயன்படுத்த முன்னர் , அவர்கள் உங்களது தனியுரிமைகளினைப் பாதுகாக்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் . பின்வருவனவற்றை பரிசீலித்தல் தொடர்பாக கவனமாக இருங்கள்:

- அவர்கள் பயனாளர் தகவல் தொடர்பான அரசினுடைய வேண்டுகோல்களுக்கு பதிலளிக்கின்றனரா
- அவர்கள் பாவனையாளர்களின் `பயன்பாட்டுப் பதிவுகளை வைத்திருந்தால்
- அவர்கள் வழங்கும் குறியாக்கத்தினுடைய வகை
- சேவகங்கள் காணப்படும் பல எண்ணிக்கையிலான நாடுகள் .

மேலே குறிப்பிட்டதானது VPN வழங்குநரது தனியுரிமை கொள்கையினைப் பரிசீலிப்பதன்மூலம் செய்யப்படலாம் . VPN கொள்கையினை பரிசீலிக்க, குறித்த வழங்குநர் வருடாந்த மூன்றாம் தரப்பு பாதுகாப்பு கணக்காய்வுக்கு உட்பட்டு அதன் பெறுபேறுகளினை பகிரங்கமாகப் பகிர்கின்றாரா என்பதனை பரிசீலித்தது பார்த்தல் . இது பாதுகாப்பு தொடர்பில் அவர்களது ஈடுபாட்டினை குறித்து காட்டும் ; எவ்வாறிருப்பினும் , மிகைப்படுத்தப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும் .

VPNபகுப்பாய்வினைக் கொண்டு உங்களது VPN வழங்குனரது தனியுரிமை மற்றும் பாதுகாப்பு செயற்திறனை நீங்களே மதிப்பீடுசெய்து கொள்ளமுடியும் , ஒரு மனித அடிப்படைகள் கொண்ட விசாரணைக்கான முன்னெடுப்பானது பொது அக்கறையினை மேம்படுத்தல் , நடைமுறை நியமங்களை உருவாக்கல் , மற்றும் VPN சுற்றுச்சூழலில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை உறுதிப்படுத்தல் என்பவற்றினை நோக்கமாகக் கொண்டுள்ளன .

# 2. பாதுகாப்பான ஒரு உலாவியினை உபயோகித்தல்

சில பாதுகாப்பான உலாவிகள் நீங்கள் இணையத் தணிக்கையினை தவிர்த்து செல்ல அனுமதிக்கின்றன . இந்த பொறிமுறையினைப் பாவிப்பதற்கான பாதகமானது உங்களது சாதனத்தில் காணப்படும் ஏனைய அனைத்து செயலிகளும் தொடர்ந்தும் தடுக்கப்பட்டிருக்கும் .

## பரிந்துரைக்கப்பட்ட VPN

**TunnelBear**

இலவச மற்றும் கட்டணம் செலுத்திய தெரிவுகளைக் கொண்டது .

**ProtonVPN**

புரோட்டான் மெயில் கணக்குடன் இணைக்கப்பட்டது.

**Outline VPN and Bitmask**

திறந்த மூல பிரயோகம் கொண்ட bitmask போன்ற இலகுவான மற்றும் பாதுகாப்பான தொடர்பாடலினை வழங்கக்கூடிய சுய-வழங்கி VPN இனை இணைத்தல் .

## பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பான உலாவிகள்

**Tor (onion router)**

உங்களுடைய IP முகவரியினை மறைப்பதுடன் நீங்கள் வலைத்தள பக்கத்தினை மூடியவுடனேயே குக்கீஸினை இல்லாதொழிக்கும் . உங்களுடைய தேடல் செயற்பாடுகள் அனைத்தையும் மறைக்குறியாக்கம் செய்யும் மற்றும் எழுமாற்றான மூன்று Tor nodes ஊடாக வழிப்படுத்திடும் . நீங்கள் தடை செய்யப்பட்ட வலைத்தளத்தினுள் நுழைந்திருக்கின்ற போதிலும் கூட நீங்கள் பாதுகாப்பாக உள்ளீர்கள் என்பதனை உறுதி செய்துகொள்ளும் .

**Brave**

உங்களுடைய IP முகவரியினை மறைப்பதுடன் நீங்கள் வலைத்தள பக்கத்தினை மூடியவுடனேயே குக்கீஸினை இல்லாதொழிக்கும் .

**Ceno**

VPN பயன்படுத்தல் ஆபத்தானதாகக் காணப்படும் வேளைகளில் பிராந்தியங்களுக்கிடையில் வலைத்தள தகவல்களினைப் பகிர்ந்துகொள்ளவும் அணுகவும் பயனாளர்களினை அனுமதிக்கின்றது

Visit Digisec.directory for an ongoing resource database of circumvention tool s available in select Southeast Asian languages.

## 3. உங்களுடைய DNS வழங்குநரை மாற்றுதல்

நீங்கள் DNS வடிக்கட்டலுக்கு முகம்கொடுப்பதனை அறிந்திருந்தால், உங்களுடைய DNS விசாரணைகளினைக் கையாள்பவர்களிடம் முறையிடுங்கள் . உங்களுடைய புதிய DNS வழங்குநர்கள் முன்னர் உங்களுடைய ISP கொண்டிருந்த தேடுதல் செயற்பாடுகள் தொடர்பான தகவலினை பெற்றுக்கொள்ளுவர் என்பதனை நினைவிற்கொள்ளுங்கள். இது தனியுரிமை தொடர்பான கவலைகளினை ஏற்படுத்தலாம் .

உங்களுடைய தேடுதல் தகவல்களினை பகிராதிருக்க வலுவான கொள்கைகள் மற்றும் அர்பணிப்புக்களினைக் கொண்ட DNS வழங்குநர்களினுடைய பட்டியக்குக்குச் செல்ல Mozilla.org இற்குச் செல்லவும் .

## 4. ப்ரொக்சி சேவையினைப் பயன்படுத்தல்

ஒரு புரொக்ஸி சேவையானது பயனாளிகளை வேறொரு சேவகத்தினூடாக நேரடியற்ற முறையில் இணையத்தினை அணுக அனுமதிக்கின்ற ஒரு சேவை அல்லது கருவியாகும் . இது பயனளிக்கும் பயனாளி அணுக விரும்பும் வலைத்தளத்துக்குமான இடைத்தரகராகச் செயற்பட்டு தணிக்கையினைத் தவிர்த்து அணுகல் தடுக்கப்பட்ட உள்ளடக்கங்களுக்குச் செல்ல உதவுகின்றது .

வலையமைப்பு - சார்பான புரொக்சிகளில் தங்கியிருத்தல் பரிந்துரைக்கத் தக்கதல்ல.மென்பொருள் நிறுவலானது சாத்தியமற்ற சந்தர்ப்பங்கள் போன்ற குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் இவை பயனுடையதாகக் காணப்படும் அதேவேளை ந இதற்கென உருவாக்கப்பட்ட கருவிகளான Psiphon மற்றும் Lantern போன்றவற்றினையே நிபுணர்கள் பரிந்துரை செய்கின்றனர். குறித்த இந்த கருவிகளானவை ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது மிகவும் பாதுகாப்பானதாகவும் நம்பகமுடையதாகவும் காணப்படுகின்றன .

# பரிந்துரைக்கப்பட்ட DNS வழங்குநர்கள்

Quad9 ஆனது பிரபல்யமான தடைகளினைத் தாண்டிச்செல்வதில் உங்களுக்கு உதவக்கூடிய DNS வழங்குனராகும். இது நேர்த்தியான அமைப்புகள் தொடர்பான விளக்கத்தினை கொண்டுள்ளது . எவ்வாறிருப்பினும் நீங்கள் புதிதான ஒரு DNS இனைப் பயன்படுத்த புதிதான ஒரு இயக்க முறைமை அமைப்பினை மாற்றுதல் வேண்டும் .

Cloudflare இல் காணப்படும் DNS னையும் நீங்கள் உபயோகிக்கலாம் . உங்களுக்கு உதவக்கூடிய அமைப்பு வழிகாட்டியும் அவர்களிடம் காணப்படுகின்றது .

# பரிந்துரைக்கப்பட்ட ப்ரொக்சி சேவைகள்

Psiphon ஆனது வழங்க VPN மற்றும் SSH ப்ரொக்சியினை பயன்படுத்துவதன் மூலம் நிகழ்நிலையிலான உள்ளடக்கங்களிற்கான தணிக்கைசெய்யப்படாத அணுகலினை வழங்கக்கூடிய பாதுகாப்பான, திறந்த மூல, பொதுவான தடுப்பு எதிர்ப்பு கருவியாகும். Psiphon உடைய பதிவிறக்கப்பட்ட பக்கங்களானது தடுக்கப்பட்டிருந்தால் நீங்கள் get@psiphon3.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தெரிவிக்கலாம் , அவர்கள் அதற்கான மாற்று இணைப்பினை வழங்குவர். அன்ரொய்டுக்கான இதனது நேரடி இணைப்பானது உங்களது சாதனத்தினை தீம்பொருளினால் பாதிப்படையக்கூடியதாக்கக் கூடிய அறிமுகமில்லாத செயலியினை பதிவிறக்கம் செய்வதற்கான அனுமதியினைத் தேவைப்படுத்தும் .

Lantern ஆனது பாதுகாப்பான, திறந்த மூல, பொதுவான தடுப்பு எதிர்ப்பு கருவியாகும் இது நிகழ்நிலையிலான உள்ளடக்கங்களிற்கான தணிக்கைசெய்யப்படாத அணுகலினை வழங்க HTTPS ப்ரொக்சியினை பயன்படுத்துகின்றது .

தென்னாசிய மொழிகளில் காணப்படும் தவிர்த்துக்கொல்வதற்கான உத்திகள் தொடர்பான தற்போது காணப்படும் மூல வளங்களிற்கு Digisec.directory இற்கு செல்லவும் .

Visi...

circumvention tool s available in select Southeast Asian languages.

# எவ்வாறு நீங்கள் இணையத் தணிக்கை மற்றும் உள்ளடக்கத் தடை என்பவற்றினை கண்காணிக்கலாம்?





## 1. OONI உடன் பங்காளிகளாதல்

உங்களுடைய பிராந்தியத்தில் நீங்களா இணையத்தினை பயன்படுத்திடும்போது வலைத்தள தணிக்கையினை அனுபவித்திருந்தால், வலையமைப்பு குறுக்கீடுகளின் திறந்த அவதானிப்பு (OONI) ஆனது பூகோள ரீதிரியில் ஏற்படும் இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்பான அறிக்கைகளினைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வமாக உள்ளது . OONI ஆனது சிறப்பான புரிதலுக்கும் மற்றும் வலைத்தள தடைகள் தொடர்பான சம்பவங்களினை ஆவணப்படுத்தவும் தகவல்களினை சேகரிக்கின்றது .

## 2. தணிக்கையினை அளவிடும் செயலிகளினை உபயோகித்தல்

OONI Probe செயலியானது இணையத்தில் காணப்படும் தணிக்கையோ மற்றும் தகவல் பரிமாற்றத்தினை கையாளுதல் போன்றவற்றினை துப்பறியும் இலவசமான மற்றும் பயனுள்ள மூலமாகும் . அணுகல் தடைசெய்யப்பட்டதற்கான ஆதாரமாக உபயோகிக்கத்தக்க தகவலினை சேகரிப்பதற்காக உதவக்கூடிய வழிமுறையாக இந்த கருவி அமையலாம் . அவர்களது மென்பொருளானது உதவும் அளவீடுகளைக் கொண்டுள்ளது:

- வலைத்தளங்களை தடுத்தல்
- உடனடி செய்திப்பரிமாற்ற செயலிகளினை தடுத்தல் (புலனம், முகப்புத்தகம் , மெசேன்ஜர் மற்றும் டெலிகிராம் )
- தணிக்கையினைப் புறக்கணிக்கும் கருவிகளினைத் தடுத்தல் (Tor போன்றவை)
- கண்காணிப்புக்கு பொறுப்பாக காணப்படக்கூடிய அமைப்புகள் (middleboxes) உங்களது வலையமைப்பில் காணப்படுதல்.
- உங்களது வலையமைப்பின் வேகமும் செயற்திறனும்

# 3. சோதனைப் பட்டியலைப் பயன்படுத்தல் அல்லது பங்களித்தல்

குறித்த சோதனைப்பட்டியலானது தணிக்கை தொடர்பாக OONI probe மற்றும் Censored Planet இனைப் பயன்படுத்தி பரிசீலனை செய்யப்பட வேண்டிய வலைத்தளங்களினைக் கொண்டிருக்கும்.

The Citizen Labஆனது குறித்த பட்டியலினை GitHub இல் 2014 இலிருந்து செயற்படுத்தி வருகின்றது, சமுதாயத்தினுடைய பங்குபற்றுதலினை ஊக்குவிப்பது மற்றும் அவர்களது புதுப்பித்தல்கள் தொடர்பாகவும் உறுதிப்படுத்துகின்றது . இரண்டு வகையான சோதனைப் பட்டியல்கள் காணப்படுகின்றன : பூகோள சோதனைப் பட்டியல் மற்றும் நாட்டுக்கென குறிப்பிட்ட சோதனைப்பட்டியல்

தணிக்கையினுடைய முழுமையான கண்காணிப்பினை உறுதிசெய்துகொள்ள இந்த பரிசோதனைக்கு பங்காளிப்பதானது மிகவும் முக்கியமானதாகும் . ஒரு தொடர்புபட்ட வலைத்தளமானது தடைசெய்யப்பட்டு ஆனால் குறித்த சோதனைக்கு உட்படுத்தகப்படும் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லையெனில் அது பரிசீலனை செய்யப்பட மாட்டாது , மற்றும் பெறுபேறுகளானது பகிரங்கமாகவும் காணப்படாது . நீங்கள் உங்களுடைய திறன் அல்லது அறிவு என்பன தொடர்பாக பொருட்படுத்தாது குறித்த பரீசீலனைக்குரிய பட்டியலுக்கு பங்களிக்கலாம் . உங்களுடைய நிறுவனமானது உங்களுடைய நாடு அல்லது பிராந்தியத்துக்குரிய சோதனைப் பட்டியலுக்கு தொடர்ச்சியாகப் பங்களிக்க விரும்பினால் மீளாய்வு மற்றும் புதுப்பித்தல்களுக்காக OONI இனை நாடலாம் . சோதனைப் பட்டியலுக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்பது தொடர்பான மேலதிக தொழிநுட்பத் தகவல்களினைப் பெற்றுக்கொள்ளவும் அவர்களை நாடலாம் .

இணையத் தணிக்கையினை அளவீடு செய்ய OONI கருவியினை எவ்வாறு பயன்படுத்துவது என்பதனை புரிந்துகொள்வதற்கென, OONI ஆனது வாதாடுதல்களுக்கான ஒன்றுகூடல் தளத்தில் ஒரு நிகழ்நிலை பயிற்சிநெறி ஒன்றினை உருவாக்கியுள்ளது . உலகளாவிய ரீதியில் காணப்படும் இணையத் தணிக்கைகள் தொடர்பான நிகழ் நேரத் தரவுகளை நீங்கள் OONI யைப் பயன்படுத்தித் தெரிந்து கொள்ளலாம் .

# ஆய்வுப் பிரச்சினை : இணையக் கண்காணிப்புச் செயற்றிட்டம்

iMAP முன்னெடுப்பானது நிகழ்நிலை வெளிப்படுத்தல் சுதந்திரத்திற்காக வாதிடும் சிவில் சமூக நிறுவனகளுக்கு மத்தியில் காணப்படும் 3 வருட செயற்றிட்டமாகும் . இதன் நோக்கமானது தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வெளிப்படுத்தல் சுதந்திரத்திற்கு காணப்படும் மட்டுப்பாடுகள் மற்றும் தலையீடுகள் என்பனவற்றினை OONI கருவிகளினைக் கொண்டு அளவீடு செய்வதாகும் .

EngageMedia ஆனது Sinar Project மற்றும் வலையமைப்புத் தலையீடுகளுக்கான திறந்த அவதானிப்பினுடைய அனுசரணையுடன் iMAP முன்னெடுப்பின் ஒரு பகுதியாக இந்தோனேசியா மற்றும் பிலிபைன்ஸ் நாட்டில் இணையத் தணிக்கை அளவீடுகளினை ஒழுங்கமைத்திருந்தது . EngageMedia ஆனது குறித்த இரு நாடுகளிலும் இணையத் தணிக்க கண்காணிப்பு மற்றும் ஆய்வினை மேற்கொண்டிருந்தது .

EngageMedia இனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் அறிக்கைகளானது இந்தோனேஷியா, மற்றும் பிலிப்பைன்ஸில் நிகழ்நிலை வெளிப்படுத்தல் சுதந்திரத்தில் காணப்படும் இணையத் தணிக்கை மற்றும் மட்டுப்பாடுகளினை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளன. இதன் முடிவுகளானவை குறித்த நடைபெற்றுக்கொண்டிருக்கும் பிரச்சினைகளினை தீர்ப்பதற்கான கண்காணிப்பு மற்றும் அறிக்கைப்படுத்தல் முயற்சிகளினுடைய முக்கியத்துவத்தினை வலியுறுத்தி நிற்கின்றன .

இந்த ஒன்றிணைந்த முன்னெடுப்பானது பிராந்தியத்தில் காணப்படும் டிஜிட்டல் உரிமைகளுக்காக வாதிடுபவர்களிடையே திறன் மேம்பாட்டில் பங்களிப்புச் செலுத்தியுள்ளன . இணைய கண்காணிப்பு செயற்றிட்டத்தினூடாக வெளிப்படுத்தல் சுதந்திரத்தினை பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தலில் சிவில் சமூக அமைப்புகளினுடைய முக்கியமான வகிபாகத்தினை இது எடுத்துக்காட்டுகின்றது .



# ஒரு திறந்த இணையத்துக்காக நீங்கள் எவ்வாறு வாதிட முடியும்?



இணையாத தணிக்கை மற்றும் உள்ளடக்க வடிக்கட்டலுக்கெதிராக வாதிடுவதானது டிஜிட்டல் உரிமையினை உயர்நிறுத்தி வைப்பதில் முக்கியமானதாகும் . சிவில் சமூக நிறுவனங்களானது உள்ளூர் சூழமைவுகள் மற்றும் தெளிவான ஆய்வுகளில் காணப்படும் அழுத்தமான வாதாட்டங்களின் ஊடாக பரந்தளவிலான திறந்த இணைய முன்னெடுப்பிற்கு பங்களிக்கலாம் . இதுபோன்ற நன்கு ஆவணப்படுத்தப்பட்ட கதைகளானது பல்வேறுபட்ட பங்குதாரர்களினுடைய ஆதரவினைப் பெறவும் மற்றும் ஒன்றிணையவும் ஒரு ஆரம்பப் புள்ளியாகக் காணப்பட முடியும் .

நீங்களோ அல்லது உங்களது நிறுவனமோ உங்களுக்குரித்தான திறந்த இணையத்துக்கான பிரச்சாரத்தினை பின்வரும் படிகளினைப் பின்பற்றி உருவாக்கலாம்:

## 1. இந்த அடிப்படையான கேள்விகளினை கேளுங்கள்

இணைய தணிக்கை மற்றும் உள்ளடக்க வடிக்கட்டலில் , நமது கோரிக்கைகளின் பிரத்தியேகத்தன்மையினை அறிந்துகொள்ள பிராந்தியத்தினுள் காணப்படும் பிரச்சினையினை அடையாளம் காண்பது முக்கியமானதாகும் . இந்தக் கேள்விகளை எழுப்புவதானது உங்களது பிரதேசத்திலுள்ள குறித்த சூழ்நிலையினை மதிப்பீடு செய்து சூழ்நிலைப்படுத்திடுவதற்கு உதவியாக இருக்கலாம் .

**உங்களது பிராந்தியத்தில் எந்த விதமான தணிக்கை மற்றும் /அல்லது வடிகட்டல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன ?**

சமுதாயமானது எந்த வகையிலான குழப்பத்திற்கு முகம் கொடுக்கின்றது என்பதனை அடையாளம் கண்டுகொள்ள, கையிலுள்ள பிரச்சசினைக்கான அளவீடுகளினுடைய சார்ப்புவிகிதம் , மற்றும் அதனைத் தவிர்க்க கூடிய வழிமுறைகள் என்பனவற்றினை கண்டறிய இது உதவுகின்றது . உங்களுடைய சூழ்நிலையினை மதிப்பீடு செய்ய முன்னைய பகுதிகளில் வழங்கப்பட்டுள்ள கருவிகளினை நீங்கள் பயன்படுத்தலாம் .

## தணிக்கை மற்றும் வடிகட்டல்கள் இலக்கு வைப்பது யாரை ?

இந்த கேள்விகள் தணிக்கை மற்றும் உள்ளடக்க வடிகாத்தலின்மூலம் பாதிக்கப்பட்ட தனி நபர்கள், நிறுவனர் அல்லது வலைத்தளங்கள் என்பவற்றையும், குறித்த மட்டுப்பாடுகள் நியாயமானதா மற்றும் பொதுப்பாதுகாப்புக்கு அவசியமானதா என்பதனையும் கண்டறிகின்றது . தணிக்கை மற்றும் உள்ளடக்க வடிக்கட்டலுக்கான நோக்கமானது நாடுகளுக்கிடையே வேறுபடுகின்றது, மற்றும் சில தணிக்கை நடவடிக்கைகளானது சிறுவர் பாலியல் உள்ளடக்கங்கள் மற்றும் மோசடியான சூதாட்டத் தளங்களுக்கான அணுகலினைத் தடைசெய்யும் அதேவேளை - ஏனையவை பாராபட்ச செயற்பாடுகளுக்கான ஒரு குறியீடாகக் காணப்படுகின்றன . இந்த இரண்டினையும் வேறுபிரிக்க ஒரு நபர் மேலதிகமான துணை வினாக்களை வினவலாம் :

### தணிக்கையானது எங்கே இடம்பெறுகின்றது ?

வரலாற்றில் அமைப்பு ரீதியான பாகுபாடுகள் காணப்பட்ட பகுதிகளில் இது காணப்படுகின்றதா ? இங்கே காணப்படுகின்ற சமூக அரசியல் பிரச்சினைகள் குறிப்பாக உணர்வுகளைத் தூண்டும் பிரச்சினைகள் தொடர்பாக விமர்சிக்கும் அல்லது குரல்கொடுக்கும் நிறுவங்கள் மற்றும் தனிநபர்களினை இது பாதிக்கின்றதா ?

### தணிக்கைக்கு வழிவகுக்கும் நிகழ்வுகள் யாவை ?

தணிக்கையானது தற்செயலானதா ? அதாவது எதிர்ப்பு முன்னெடுப்புகள் அல்லது அரசியல் தேர்தல்கள் போன்ற நிகழ்வுக்கு இட்டுச் செல்கின்றதா ? குறித்த மட்டுப்பாடுகளானது குறிப்பிட்ட சில குழுக்கள் வெளிப்படையாகப் பேசுவதிலிருந்து மௌனித்தல் மற்றும் / அல்லது மக்களுக்கு பரந்துபட்ட அளவில் தகவல்களைப் பறிக்கும் ஒரு குறிகாட்டியாகப் பார்க்கப்படலாம் .

## தணிக்கை மற்றும் வடிகட்டுதல் யார் இலக்கு?

### தணிக்கையினை நடைமுறைப்படுத்துவபர்களால் கூறப்படும் நியாயப்படுத்தல்கள் யாவை?

தணிக்கை அல்லது வடிகட்டல் நடைமுறைப்படுத்துவதற்கான காரணங்களானது சூழமைவுகளுக்கேற்றப வேறுபடுகின்றன . தீர்மானிப்பதற்கான வழிமுறைகளானவை குறித்த கோரல்களுக்கான நியாயப்படுத்தல்கள் போதுமானளவு சாட்சியங்களினால் நியாயப்படுத்தப்பட்டுள்ளதா, முன்னைய விடயங்களுக்கான பதில் நடவடிக்கைகள் . வினைத்திறனற்றவையாகக் காணப்பட்டதா மற்றும் மூன்றாம் தரப்பினருடைய மதிப்பீடுகள் போன்றவற்றினை உள்ளடக்கும்

### தணிக்கையினுடைய தாக்கம் யாது ?

இணையத் தணிக்கையானது பரந்த அளவில் தனி மனிதர் மற்றும் சமுதாயத்தினுடைய மனித உரிமைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம். பூகோள வலையமைப்பு முன்னெடுப்பினால் மேற்கொள்ளப்பட்ட "துண்டிப்பு : வலையமைப்பு சீர்குலைவுகள் மீதான மனித உரிமைகள் அணுகுமுறை " எனும் அறிக்கையானது ஓரம்கட்டப்பட்ட இனக்குழுக்கள், புலம்பெயர்ந்தோர் , பெண்கள் மற்றும் யுவதிகள் உட்பட நலிவுற்றவர்கள் மீது வலையமைப்பு சீர்குலைவுகள் ஏற்படுத்தும் மனித உரிமைகள் தொடர்பான தாக்கங்களை ஆவணப்படுத்துகின்றது . " வலையமைப்பு இணைப்புத் துண்டிப்பினால் ஏற்படும் பொருளாதாரத் தாக்கங்கள் " அறிக்கையானது உலகெங்கிலுமுள்ள அரசாங்கங்கள் வேண்டுமற்று இணையத்தினை முடக்குதல் அல்லது துண்டிப்பதனால் ஏற்படக்கூடிய முக்கியமான பொருளாதாரச் சேதங்களினை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது .

## இணைய தணிக்கை மற்றும் /அல்லது வடிகட்டலானது உள்ளூர் சட்டதிட்டங்களின் கீழ் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது ?

இணையச் செயற்பாடுகள் தொடர்பான கொள்கைகளானது நாடுகள் மற்றும் பிராந்தியங்களின் அடிப்படையில் வேறுபடுகின்றன . ஏதாவது ஒரு சட்டத்தினை, சட்ட மூலத்தினை அல்லது தொடர்புடைய ஆணையினை நீங்கள் அடையாளம் கண்டுகொண்டால், நீங்கள் தெரிவுசெய்த ஆய்வுப் பிரச்சினையின் சட்டபூர்வத்தன்மை காணப்படுகின்றதா என்பதையும் மற்றும் குறித்த சட்டம் இணைய சுதந்திரம் தொடர்பான போதுமான அளவு பாதுகாப்பு காணப்படுகின்றதா என்பதனைப் பரிசோதிக்கலாம் . சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் பிரிவு 19 இன் கீழ் கூறப்பட்டுள்ள மூன்று பகுதி சோதனையைப் பயன்படுத்துவதன் மூலம், அவை எவ்வாறு உரிமைகளை மதிக்கின்றன என்ற நியமமாகலாம், இது 'சட்டத்தால் வழங்கப்பட்டு மற்றும் தேவையேற்படின் மற்றும் விகிதாசார அடிப்படையில் மட்டுமே என்ற கட்டுப்பாடு விதிக்கப்படலாம்' : (அ) மற்றவர்களின் உரிமைகள் அல்லது நற்பெயருக்கு மரியாதை; (ஆ) தேசிய பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்கு (ordre public), அல்லது பொது சுகாதாரம் அல்லது ஒழுக்கம் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக மட்டுமே மேற்கொள்ளப்படலாம் .

GNI இனால் உருவாக்கப்பட்ட மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மூல வளங்கள் :

1. நாட்டு சட்ட வரைபுகள் மூல வளங்கள் (GNI) : இது 50 க்கும் மேற்பட்ட நாடுகளில் தொடர்பாடலினை இடைமறிக்க , தொடர்பாடல் தரவுகளினை அணுக அல்லது தொடர்பாடலின் உள்ளடக்கங்களைத் தடை செய்ய அரசாங்கங்களின் சட்ட அதிகாரிகளினை ஆய்வு செய்கின்றது.
2. இணையப் பொறுப்புடைமைகள் மீதான மனிலா கொள்கைகள் : அடிப்படைப் பாதுகாப்பு மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கான சட்ட வரையறைகள்.
3. உள்ளடக்க நடைமுறைப்படுத்தல் மற்றும் மனித உரிமைக் கொள்கைகளின் சுருக்கம் (GNI) : உள்ளடக்கங்களுக்கான சவால்களினை கண்டறிவதற்கான சட்ட மற்றும் ஒழுங்குவிதி முயற்சிகளை பகுப்பாய்வு செய்யவும் மற்றும் தகவலளிக்கவும் மனித உரிமை கொள்கைகளினை உபயோகிக்கின்றது .
4. இணைய முடக்கம் மற்றும் சேவை இடைநிறுத்தங்களின் விளைவுகள் : 12 மொழிகளில் காணப்படுகின்றது

# ஆய்வுக் கல்வி : **2019 இல் மேற்கு பபுவாவின் இணைய முடக்கம்**

நாம் ஒருமித்து ஆராயக்கூடிய ஒரு ஆய்வானது 2019 இல் இந்தோனேசிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மேற்கு பபுவாவில் இணையத்தனிக்கை என்னும் ஆய்வாகும் . இணையத்துக்கான அணுக்கலானது கடுமையாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது மற்றும் குறித்த வருடத்தில் ஆவணிக்கும் புரட்டாதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அந்த மாகாணத்தில் 700,000 வரையான உள்ளூர் வலைத்தளங்கள் முடக்கப்பட்டன . குறித்த தணிக்கையினை இந்தோனேசிய அரசாங்கமானது மேற்கு பப்புவா நிகழ்நிலையானது " புரளிகளினால் நிறைந்துள்ளது " எனக்கூறி நியாயப்படுத்தியது .

எனினும், இதனை முகத்தோற்ற அளவில் எடுத்துக்கொள்ளப்படல் ஆகாது . வரலாற்று ரீதியாகவே , பப்புவா மக்களும் அந்த பிராந்தியமும் இந்தோனேசிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டமைக்கப்பட்ட பாராபட்சத்தால் பாதிப்படைந்துள்ளனர் . உண்மையில் , குறித்த இணைய முடக்கமானது, பிரதான தீவகத்தினுள் காணப்படும் நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றான சுரபாய பகுதியில் பபுவாவைச் சேர்ந்த ஒரு மாணவனுக்கு மேற்கொள்ளப்பட்ட இனவெறுப்பு தாக்குதலுக்கு எதிராக மேற்கு பாப்புவாவில் தொடங்கிய கிளர்ச்சியினை நிறுத்தவும் மற்றும் அதனை இழிவுபடுத்தவுமே குறித்த இணைய முடக்கம் மேற்கொள்ளப்பட்டது . மனித மற்றும் டிஜிட்டல் உரிமைகள் அமைப்புகள் கூட குறித்த நிகழ்நிலை மற்றும் மூடு நிலை பரப்புகளில் ஏற்பட்ட முடக்கலினை கண்டித்திருந்தன . 2020 ஜூனில், இந்தோனேசியாவின் நிவாக நீதிமன்றமானது (PTUN) மேற்கு பபுவாவில் மேற்கொள்ளப்பட்ட இணையத் தணிக்கையானது இலத்திரனியல் தகவல்கள் மற்றும் பரிமாற்றச் சட்டத்தின் 40ம் பிரிவினை மீறுவதாக தீர்ப்பளித்திருந்தது . மற்றும் அரசினால் பயன்படுத்தப்பட்டிருந்த தொழிநுட்பங்களில் அதிகமானவை சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டதற்கும் மேலானவை என்பது குறிப்பிடத்தக்கது .

## 2. செய்தியினை முடிவுசெய்தல்

உங்கள் முன்னெடுப்புப் பிரச்சாரத்துக்காக நீங்கள் தேர்வு செய்த ஆய்வுப் பிரச்சசினையில் கவனம் செலுத்தவேண்டிய பல முக்கியமான விடயங்களில் முடிவடையும். யாருக்கு என்ன செய்தி அனுப்பப்படல் வேண்டும் என்பதனைத் தீர்மானிக்க உங்கள் கையிலுள்ள பிரச்சினைதொடர்பாக பின்வரும் வினாக்களை வினவுதல் வேண்டும், அல்லது SMART முறையினைப் பின்பற்றி எந்த செய்தி முன்னிரிமைக்குரியது என்பதனைத் தீர்மானித்தல் வேண்டும் . செய்தியானது பிரச்சாரத்தினுடைய நோக்கத்துடன் தெளிவாகப் தொடர்புபடுதல் மற்றும் உங்களது போராட்டத்திற்கு பங்களித்தல் வேண்டும் .

இலக்காகக் கொள்ளப்பட்ட பார்வையாளர்களிற்கு நுணுக்கமான மற்றும் விரிவான செய்தியினை வழங்குவதற்கு இணையத்தனிக்கைப் போராட்டத்தினுடைய ஒரு விரிவான பிரச்சினை மற்றும் அழுத்தமான செய்தி என்பன கட்டியெழுப்பப்படுத்தல் முக்கியமானதாகும் . உங்களுடைய வாதாட்ட பிரச்சாரத்தின் பலம் , பலவீனம், வாய்ப்புகள் மற்றும் வெற்றிக்கு காணப்படும் அச்சுறுத்தல்கள் என்பனவற்றைத் தீர்மானிக்க SWOT பகுப்பாய்வினை நாம் பரிந்துரை செய்கின்றோம் . இதனை செய்வதன் மூலம், எதிர்காலத்தில் நீங்கள் குறித்த நோக்கத்துக்காக போராடும்போது சிறப்பாக திட்டமிட்டு செயற்படுவார்கள் .

## 3. பிரச்சாரத் திட்டத்தை வடிவமைத்தல்

வெற்றிகரமான ஆதரவுப் பிரச்சாரங்களானவை வலுவான காலவரையறை, கணக்கிடப்பட்ட வெளியீடுகள் மற்றும் அளவிடக்கூடிய விளைவுகள் என்பனவற்றைக் கொண்டு ஆதரப்படுத்தப்படுகின்றன . குறித்த முன்னெடுப்பானது நீங்களோ அல்லது உங்களது நிறுவனமோ குறித்த ஆதரவினை தொடரும்வரை குறித்த பிரச்சாரம் காணப்படலாம் அல்லது சிறியதாகவும் ஏலவே காணப்படுகின்ற முன்னெடுப்புகளின் மேல்நிலையிலுந்து நடவடிக்கைகளுக்காக அழைப்பு விடுக்கலாம் .

உங்கள் பிரச்சாரத்தை வடிவமைப்பதில், ஸ்பிட்ஃபயர் உத்திகள் மூலம் ஸ்மார்ட் சார்ட்டை முடிக்க பரிந்துரைக்கிறோம்.

எங்கள் சொந்த நிறுவன திறன்களை மதிப்பிடுவதிலும், சாத்தியமான கூட்டாளர்களை வரைபடமாக்குவதிலும், வக்கீல் திறனைத் தீர்மானிப்பதற்கான கட்டமைப்பைப் பயன்படுத்தலாம்.

# 4. ஏனைய குழுக்களின் ஆலோசனையினைப் பெறுதல்

ஆரம்பகட்ட தரவு சேகரிப்பினை உறுதிப்படுத்தல் மற்றும் ஆய்வுப் பிரச்சினையில் காணப்படும் சார்புச் சாத்தியங்களினை சோதனை செய்துகொள்ளவும் ஒரே மாதிரியான எண்ணம் கொண்ட நிறுவனங்களின் ஒன்றுகூடல் மற்றும் கையிலுள்ள பிரச்சினையினை(களை ) பகுப்பாய்வு செய்ய பணிக் குழு ஒன்றினை ஒழுங்கமைத்தல் போன்ற விடயங்களினை நாம் பரிந்துரை செய்கிறோம் . குறித்த பணிக்குழுவானது ஏனைய மனித மற்றும் டிஜிட்டல் உரிமைகள் தொடர்பான நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் அடிமட்ட சமூகங்கள் போன்றவற்றினை கொண்டிருக்கலாம் . நீங்கள் உருவாக்கும் எந்தவொரு பணிக்குழுவும் இயலுமானவரை பலதப்பினைரைக் கொண்டதாகவும் மற்றும் உள்ளடக்கியதாகவும் காணப்படுவதனை உறுதிசெய்து கொள்ளுங்கள் . கேட்கப்படாத மற்றும் பிரதிநிதித்துவம் செய்யப்படாதவர்களினை இணைப்பது தொடர்பாக சிறப்பான கவனம் செலுத்துதல் வேண்டும்.

பகுப்பாய்வானது ஏலவே காணப்படும் செயற்பாடுகளினை ஒன்றிணைத்தல் மற்றும் அனைத்து அங்கத்தவர்களிடமிருந்து வழங்கப்பட்ட பிரச்சினை தொடர்பான சூழமைவினை பெற்றுக்கொள்வதனையும் இலக்காகக் கொள்ளுதல் வேண்டும் . மற்றும் இது அர்த்தமுடைய, திறந்த மற்றும் வளப்படுத்தக்கூடியதானதான என்ற கொள்கையினைக் கொண்டிருத்தல் வேண்டும் .

இலக்காகக் கொள்ளப்பட்ட பார்வையாளர்களிற்கு நுணுக்கமான மற்றும் விரிவான செய்தியினை வழங்குவதற்கு இணையத்தனிக்கைப் போராட்டத்தினுடைய ஒரு விரிவான மற்றும் அழுத்தமான செய்தி என்பன கட்டியெழுப்பப்படுத்தல் முக்கியமானதாகும் . இதனை உள்ளடக்குவதன் மூலம், எதிர்காலத்தில் நீங்களோ அல்லது நிறுவனமோ குறித்த நோக்கத்துக்காக போராடும்போது சிறப்பாக திட்டமிட்டு செயற்படுவார்கள்.

# 5. பங்குதாரர்களினை கண்டறிதல்.

இணையத்தினுடைய பங்குதாரர்கள் யாவர் ? பங்குதாரர்கள் என்போர் ஒரு அமைப்பு - ஒரு நபர் அல்லது நிறுவனமாக காணப்படலாம் - நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்படவல்ல அல்லது முயற்சியில் தாக்கமடையக்கூடிய நபர்

திறந்த இணையத்தளத்துக்கான எமது போராட்டத்தில் எமக்கான வழக்கெழு காரணி யாதென்பதனை திட்டமிட எமது பங்குதாரர்கள் யார் என்பதனை முதலில் புரிந்து கொள்ளுதல் வேண்டும் . 2015 இல் அர்ப்பணிக்கப்பட்ட பெயர்கள் மற்றும் இலக்கங்களுக்கான சர்வதேச கூட்டுத்தாபனமானது (ICANN) பின்வருபவர்களை இணைய தணிக்கை மற்றும் வடிகட்டல் அக்கறைகள் உட்பட இணைய நிவாகத்துக்கான பிரதான பங்குதாரர் குழுக்களாகக் அடையாளம் கண்டது. இந்தப்பட்டியலானது உங்களது சொந்த பங்குதாரர்களுக்கான வரைபட பயிற்சியினுடைய ஆரம்பப் புள்ளியாக அமையலாம்



### அரசாங்கம்

அரசாங்கமானது இந்த இணைய நிர்வாகத் திட்டத்தில் மிக முக்கியமான பங்குதாரர்களில் ஒருவராகும். பல நாடுகளில், தங்களது நியாயாதிக்கத்தினுள் காணப்படும் இணைய பாவனைக்காக பிரதான ஒழுங்குபடுத்தல் அமைப்பாக அரசாங்கமே காணப்படுகின்றது; சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளினைக் கொண்டு நேரடியாக இணையத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய திறன் அவர்களுக்குக் காணப்படுகின்றது, அத்துடன் நாளாந்த இணைய பாவனையினை மேற்பார்வைசெய்து அது தொடர்பான தீர்மானகளினை எட்டக்கூடிய அதிகாரிகளினைப் பயிற்றுவிக்க வேண்டியதும் அவர்களது பொறுப்பாகும் . இணையாத தணிக்கை மற்றும் வடிகட்டல் தொடர்பான பல்வேறு வழக்குகளில் எந்த உள்ளடக்கத்துக்கான அணுகல் வழங்கப்படல் வேண்டும் எவற்றுக்கு தடுக்கப்படல் வேண்டும் என்பதனைத் தீர்மானிப்பதில் அரசானது ஒரு நடுநிலையான வகிபாகத்தினை வகிக்கின்றது .

## வணிகத் துறை

இணையத்தில் காணப்படும் வணிகத் துறையானது இலாபத்தை நோக்கியதாகவே காணப்படும், குறித்த வணிகமானது இணையத்தில் எந்த துறையில் செயலாற்றுகின்றது என்பதனைப் பொறுத்து அதனது அக்கறையானது வேறுபடுகின்றது . பல சந்தர்ப்பக்கங்களில், இணைய முடக்கம் மற்றும் வடிக்கட்டலில் நேரடி விளைவுகளினைக் கொண்டவர்களும் அதனால் நேரடியாகப் பாதிப்படைப்பவர்களுமாக வணிகத் துறையினரே காணப்படுகின்றனர் .

- டொமைன் -பெயர் கம்பெனி : இது .com, .org, and .net போன்ற இணைய இராச்சியப் பெயர்களினை விற்பனை செய்கின்ற பதிவாளர்கள் மற்றும் பதிவகங்களினை உள்ளடக்குகின்றது . தமது டொமைன் பெயரானது நீண்டகாலம் இலாபகரமானதாகக் காணப்படுவதனை உறுதிப்படுத்திக்கொள்வதே அவர்களது பிரதான நோக்கமாகும் , அது எந்நேரமும் பொது மக்களுடைய தேவைகளுக்கு சார்பானதாக காணப்படாது . இதில் கவனிக்கவேண்டிய நிகழ்வு யாதெனில் பல CSO கள் மற்றும் அடித்தட்டு மக்கள் தமது போராட்டங்களினை நிகழ்நிலையில் கொண்டு இயக்கக்கூடிய .org டொமைனினை நிர்வகிக்கின்ற பொதுப் பதிவகமானது Ethos Capital எனப்படக்கூடிய தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை செய்யப்படுவதற்கான நிலையிலுள்ளது, குறித்த டொமைனானது பதிவேட்டில் கடுமையான கடன்சுமை கொண்ட இலாப நோக்க நிறுவனமாகக் காணப்படுகின்றது . குறித்த விற்பனையானது இடம்பெற்றால் , அது எவ்வாறு இயக்கப்பட்டது என்பதில் தாக்கங்கள் ஏற்படும் , மற்றும் குறித்த டொமைனில் பதியப்பட்டுள்ள பல இலாப நோக்கற்ற அமைப்புகளுக்குத் தாக்கத்தினை ஏற்படுத்தும் . இது இணையத்தில் காணப்படும் பல சமுதாயங்களினை மௌனிக்கச் செய்வதனால் இந்த விற்பனை செய்தல் அபாயத்தினை தன்னை தானே தணிக்கை செய்வதற்கு சமம் என்றவாறு பலர் ஒப்பீடு செய்கின்றனர்.

- தகவல் தொடர்பு நிறுவனங்கள் மற்றும் இணைய சேவை வழங்குநர்கள் : பெயரில் குறிப்பிடப்படுவது போல, குறித்த கம்பெனிகளானது இணையத் தகவல் பரிமாற்றத்தினை அவனை செய்வது மற்றும் இணையச்சேவை மற்றும் உட் கட்டமைப்பினை வழங்குகின்றது . சில தேசியமயப்படுத்தப்பட்டவை மற்றும் / அல்லது அரசுடன் இணைக்கப்பட்டவை, அதேவேளை ஏனையவை தனியாருடையவை மற்றும் பலதேசிய கம்பெனிகளாகவும் பல நாடுகளில் இயங்குவனவாகவும் காணப்படுகின்றன. இணையசேவை வழங்குவதே அவர்களது பிரதான நோக்கமும் செயற்பாடுமாகக் காணப்படுகின்ற அதேவேளை , முக்கியமான நிகழ்நிலைத் இடைத் தரகர்களாக மற்றும் இணைய நிர்வாகத்தினுடைய முக்கிய பாகமுமாகக் காணப்படுகின்றனர் . குறிப்பாக இணையாத தணிக்கை மற்றும் வடிகட்டல் விடயங்களில் அதனை செயற்படுத்துவதற்கான அதிகாரத்தினை ISP கள் கொண்டுள்ளனர் , மற்றும் அரசினுடைய அறிவுறுத்தலின்பேரிலோ அல்லது அதிகரித்த பொதுமக்களினுடைய கோரிக்கைகளினாலோ அவர்கள் அடிக்கடி அதனை மேற்கொள்ளுகின்றனர் .
- இணைய உள்ளடக்க கம்பெனிகள்: மிகவும் குறித்து நோக்கக்கூடிய இணைய நிறுவங்களின் வகைகளாக META மற்றும் TWITTER போன்ற சமூக ஊடக கம்பெனிகள்; கூகுளை பிரபல்யமான உதாரணமாகக் காணப்படக்கூடிய தேடுதல் பொறிகள் ; டிஸ்னி மற்றும் நெட்பிலிக்ஸ் மற்றும் இனிய காட்சித் தளங்கள் போன்ற உள்ளடக்கங்களைக் கொண்ட தயாரிப்பாளர்கள் . இவர்களினுடைய வணிக மாதிரியானது அரசாங்கங்களினுடைய தரவு மற்றும் தனியுரிமை தொடர்பான சட்டங்களினால் அதிகளவாக பாதிப்பிற்குள்ளாகின்றது, மற்றும் அவர்களது முதன்மையான அக்கறையானது அவர்களது உலகலாவிய வெளிப்பரவலை பாதுகாத்தல் மற்றும் பூகோள ரீதியில் அதனது பாதிப்புரிமையினைப் பாதுகாத்தலுமாகும் .

GNI மற்றும் BSR இனால் வழங்கப்பட்ட கருவியானது தொழிநுட்பச் சூழல் மற்றும் அதனுடன் தொடர்புடைய வரைவிளக்கணங்களுக்கான ஒரு வரைபடத்தினை வழங்குகின்றது .

## சிவில் சமூகம்

அரசினுடைய தணிக்கை மற்றும் வடிகட்டல் கொள்கைகளினால் அதிகமாகப் பாதிக்கப்படுவது சிவில் சமூகமாகும் . அவர்களுடைய உள்ளடக்கங்களானது - குறிப்பாக அராசாங்கத்தினை விமர்சிப்பதாக மற்றும் துஸ்பிரயோகங்களை வெளிச்சமிட்டுக் காட்டுவதாகவும் காணப்படுவதனால் மேலதிக பார்வையாளர்கள் மற்றும் பங்களிப்பிலிருந்து தடைசெய்யப்படும் . உரிமைகளினை- மதிக்கும் கொள்கைகள், மற்றும் பொறுப்புக்கூறல் போன்றவையே பேச்சுவார்த்தைகளின் மையமாக காணப்படுவதனை உறுதிசெய்யும் இணைய நிர்வாகத்துக்கான பலதரப்பட்ட பங்குதாரர்களின் குரலாகவும் வினைத்திறனான ஊக்குவிப்பாளர்களாகவும் அனைத்து மட்டங்களிலும் சிவில் சமூகத்தினரே காணப்படுகின்றனர் . எவ்வாறிருப்பினும் , முறையான ஒழுங்கமைப்பு காணப்படாமை மற்றும் முரண்படக்கூடியவாறான அதிக குரலெழுப்புதல்கள் காணப்படுதல் போன்றவை சிவில் சமூகங்களில் காணப்படுகின்ற பிரதானமான பிரச்சினையாகும் .

## நியமங்களை ஏற்படுத்தும் நிறுவனங்கள்

தொழிநுட்ப விடயங்களுக்கு மேலாகச் சென்று மனித உரிமைகளினைப் பாதுகாப்பதற்கான தொழில்முறை சார் அபிவிருத்திகளினை வழிநடத்த அமைப்புகள் எத்தனிக்கின்றன . இதற்கான உதாரணமாக இணைய பொறியியல் செயற்படை , மற்றும் உலகளாவிய வலைத்தள கூட்டமைப்பு , இணையச் சபை மற்றும் இணைய ஆய்வுப் படை இது இணைய நிர்வாகத்தில் கவனம் செலுத்துவதற்கானது.மற்றும் யுனெஸ்கோ வினுடைய நம்பிக்கைக்கான இணையம் போன்ற சர்வதேச மற்றும் பலதரப்பட்ட நிறுவனகளும் குறித்த வழிகாட்டுதல்கள் மற்றும் நியமங்களினைத் தோற்றுவிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்



# 6. பங்குதாரர்களுடனான ஒன்றிணைவு

## பலதரப்பு பங்குதாரர்கள் அணுகுமுறை என்பது யாது?

பலதரப்பு பங்குதாரர்கள் அணுகுமுறை என்பது தொடர்புபட்ட அனைத்து விதமான பங்குதாரர்களினையும் கண்டறிந்து ஈடுபடுத்தும் வியூகமாகும் . இந்த மாதிரியில் ஒவ்வொரு பங்குதாரர்களினுடைய உள்ளீடுகளிற்கும் சமமான கனாகனம் வழங்கப்பட்டு , குறித்த பிரச்சினை தொடர்பாக மிகவும் குறிப்பான கொள்கைகள் மற்றும் உரையாடல்களினை மேற்கொள்ள உதவுகின்றது . பிரச்சார உத்திகளில் இதனை உள்வாங்கலானது அனைத்து விதமான படிநிலைகளில் காணப்படும் பிரதானமான செயற்பாட்டாளர்களின் கருத்துக்களிற்கும் அக்கறைசெலுத்தி தீர்மானகளினை மேற்கொள்ளும் ஒரு சூழலினை உருவாக்கும் .

## எவ்வாறு நாங்கள் பங்குதாரர்களுடன் இணைந்து செயற்படுவது ?

உங்களுடைய ஆதரவுப் பிரச்சாரத்தில் இணைந்துகொள்ள வெவ்வேறு பங்குதாரர்களுக்கு வெவ்வேறுபட்ட திட்டங்கள் தேவைப்படுகின்றன . உங்களுடைய அல்லது உங்கள் நிறுவனத்தினுடைய இலக்கு யார் என்பதன் அடிப்படையில் மூன்று விதமான ஒன்றினைப்புகள் இங்கே கோடிடப்பட்டுக் காட்டப்படுகின்றது .



பொதுமக்கள் பங்குபற்றுதலானது இணையத் தணிக்கை மற்றும் உள்ளடக்க வடிகட்டல் தொடர்பான விழிப்புணவினை பொதுமக்களுக்கு ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொணடது. இதன்மூலம் இலக்கு வைக்கப்பட்ட குழுவானது குறித்த விடயத்தில் பூரா அறிவு கொண்டவர்களாகக் காணப்படாதபடியினால் அவர்களுக்கு அறிவூட்ட எளிமையான மொழி நடைகள், பிரபல்யமான கருவிகள் மற்றும் திட்டங்களை உபயோகிக்க ஆலோசனை வழங்கப்படுகின்றது . இந்த பொதுமக்கள் பங்குபற்றுதலானது அனுதாபம் மற்றும் அக்கறைகளினை வெளிக்கொணராலும் , இதனது பிரதான நோக்கம் மக்களுக்கு புதுப்பித்தலுமென்பதனை நினைவிற் கொள்ளுங்கள். பொது மக்களினை ஈடுபடுத்தலானது பின்வருவனவற்றின் மூலம் மேற்கொள்ளப்படலாம் :

- பொதுவெளிப் பிரச்சாரமானது இளைஞர்கள் மற்றும் தொழிநுட்பத்தில் ஈடுபாடு கொண்டவர்களை குறிப்பாக இந்த விதத்தில் பாதிப்படையக்கூடியவர்கள் போன்றவர்களை சென்றடைவதற்காக சமூக ஊடக பிரச்சாரம் ஒன்றினை மேற்கொள்ளலாம் அல்லது சமீப கால அபிவிருத்திகள் மற்றும் ஓரம் கட்டப்பட்டவர்களுடைய குரல்கள் கேட்கப்பட முக்கியமான செய்திகளினைப் பிரசுரிக்கின்ற மரபு ரீதியான செய்தி ஊடகம் ஒன்றுடன் கூட்டிணைத்தல் .
- பொது மக்களினுடைய ஆதரவினைப் பெறுவதற்கான பிரேரணை ஒன்றினை மேற்கொள்ளல். குறித்த எண்ணிக்கைகளின் பலம் ஒன்று காணப்படுகின்றது மற்றும் குறித்த பிரேரணையானது அவசரத் தன்மை மற்றும் உறுதியான தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனைக் காட்ட உதவியாக அமையும் .
- குறித்த விடயத்தில் ஆதரவு ஆய்வு ஒன்றினை நடத்தல். இது முன்னைய ஆய்வுகளினை அடிப்படையாக வைத்து உருவாக்கப்படலாம் .



அரசினுடைய ஈடுபாடானது குறித்த நோக்கத்துக்காக அரச செயற்பாட்டாளர்களின் மேலே கவனம் செலுத்துகின்றது . என்ன செய்வது என்பதனைத் தீர்மானிக்க முன்னர், இணைய தணிக்கை மற்றும் உள்ளடக்க வடிகட்டல் சட்ட விதிகளுக்குப் பொறுப்பான அரசினுடைய அங்கங்களினை நாம் அடையாளம் காணுதல் வேண்டும்; இது ஒரு குறிப்பிட்ட அமைச்சாகவோ, சட்டவாக்க நிறுவகமாகவோ அல்லது சுயாதீன அமைப்பாகவோ காணப்படலாம் . நாம் குறித்த செய்யலாற்றுபவர்களினையும் ஆவர்கள் செயலாற்றும் விடயத்தினையும் கண்டறிந்தபின்னர் எமக்கு காணப்படும் சந்தர்ப்பங்கள் மற்றும் அவசரத்தின் அடிப்படையில் எமது ஈடுபாட்டினைத் திட்டமிடல் செய்யமுடியும் .



கூட்டு நிறுவனங்கள் மற்றும் லாபநோக்க நிறுவங்களுடனான ஒன்றிணைவானது பொறுப்புக்கூறலினை கோருதல் மற்றும் ஏலவே காணப்படும் கம்பெனிகளின் கொள்கைகளில் உரிமைகளினை மதிக்கும் கொள்கைளினை முன்னிலைப்படுத்துவதானி உறுதி செய்தல் போன்றவற்றிலேயே கவனம் செலுத்துகின்றது . பூகோள வலையமைப்பு முன்னெடுப்பானது வெளிப்படுத்தல் சுதந்திரம் மற்றும் தனியுரிமை உரிமைகள் சார்பான பொறுப்பான கம்பனித் தீர்மானங்களினை மேற்கொள்ளவது தொடர்பான பல தரப்பு ஒன்றிணைவுகளினை உள்ளடக்கிய மிகவும் வெற்றிகரமான பங்கினைவுகளில் ஒன்றாகும் . GNI உடைய அங்கத்துவமானது, ICT கம்பெனிகள் , சிவில் சமூக நிறுவனங்கள் , கல்விமான்கள் மற்றும் ஆபிரிக்க, ஐரோப்பா, லத்தின் அமெரிக்கா, 1வட அமெரிக்க மற்றும் மதித்திய கிழக்கிலுள்ள முதலீட்டாளர்களை உள்ளடக்கியது .

# கவன ஈர்ப்பு : பூகோள வலையமைப்பு முன்னெடுப்பு

பூகோள வலையமைப்பு முன்னெடுப்பானது வெளிப்படுத்தல் சுதந்திரம் மற்றும் தனியுரிமை உரிமைகளில் பொறுப்புவாய்ந்த நிறுவன தீர்மானகளினை மேற்கொள்ளுவதில் பலதரப்பட்ட பங்குதாரர்களின் ஒத்துழைப்பினை உள்ளடக்கிய மிகவும் வெற்றிகரமான பங்கிணைவுகளில் ஒன்றாகும் . GNI உடைய அங்கத்துவமானது, ICT கம்பெனிகள் , சிவில் சமூக நிறுவனங்கள் , கல்விமான்கள் மற்றும் ஆபிரிக்க, ஐரோப்பா, லத்தின் அமெரிக்கா, வட அமெரிக்க மற்றும் மதித்திய கிழக்கிலுள்ள முதலீட்டாளர்களை உள்ளடக்கியது .

GNI ஆனது பூகோள பங்காளர்கள் டிஜிட்டல் உடன் இணைந்து "தொழிநுட்ப கம்பனிகளை மனித உரிமைகளுக்குள் உட்படுத்தல் : சிவில் சமூகத்துக்கான எவ்வாறு என்ற வழிகாட்டல்" ஒன்றினை மனித உரிமைகளினைப் பாதிக்கின்ற பிரச்சினைகளினை சூழவுள்ள தொழிநுட்பத் துறையுடன் CSO களின் ஈடுபடுத்தலுக்கு உதவும்வகையில் உருவாக்கியுள்ளது .

# 7. பிரச்சாரம் ஒன்றினை நிறைவேற்றல்

ஒவ்வொரு பிரச்சாரமும் நீங்களோ அல்லது உங்களது நிறுவனமோ தொடர்பினை ஏற்படுத்த முயற்சிக்கும் பங்குதாரர்களினுடைய தேவைகளிற்கு ஏற்றால்போல் உருவாக்கப்படுத்தல் வேண்டும் . திறந்த ஒரு இணையத்தினை நோக்கி ஏனையவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அவர்களது சொந்த பிரச்சாரங்களுக்கான உதாரணங்கள் கீழே பகிரப்படுகின்றது .

# 8. தாக்கத்தினை அளவிடுதல்

ஆதரவுப் பிரச்சாரங்களினுடைய வெற்றியினை முடிவு செய்தல் மிகவும் சிக்கலானதாக காணப்படலாம் , ஆனாலும் உங்களது பிரச்சாரத்தின் வெற்றியினை மதிப்பிடுவதற்கு சோதனை முறைமைகள் காணப்படுகின்றன . டிஜிட்டல் பிரச்சாரங்களுக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு மாதிரிகளானது பொதுவெளியில் குறித்த பிரச்சாரத்தினுடைய வெற்றியினை அளவிட்டுக்கொள்வதற்காக உள்வாங்கப்படலாம் .

அரசியல் மற்றும் சட்ட மாற்றங்களினை இலக்காகக் கொண்ட பிரச்சாரங்களின் வெற்றியினை அளவிடுவதற்கு , உங்களுடைய பிரச்சாரத்தின் செய்திகளானவை எலவேயுள்ள சட்டங்களில் அல்லது முன்மொழிவுகளில் உள்வாங்கப்பட்டுள்ளனவா என்பதனை மதிப்பீடு செய்துகொள்ள உங்களுடைய உள்ளூர் சட்டங்களில் ஏற்படுத்தப்படும் திருத்தங்களை நீங்கள் அறிக்கைப்படுத்திக்கொள்ளலாம் . GNI ஆனது நாட்டு சட்ட வரைபுகள் மூல வளங்களினை கொண்டுள்ளது . இது 50 க்கும் மேற்பட்ட நாடுகளில் தொடர்பாடலினை இடைமறிக்க , தொடர்பாடல் தரவுகளினை அணுக அல்லது தொடர்பாடலின் உள்ளடக்கங்களைத் தடை செய்ய அரசாங்கங்களின் சட்ட அதிகாரிகளினை ஆய்வு செய்யும் விரிவான மூலங்களினை கைப்பற்றுவதற்கு உங்களுக்கு உதவுகின்றது .

எவ்வாறிருப்பினும், இதன் தாக்கமானது குறிப்பாக திறந்த இணையத்துக்கான எமது போராட்டத்தில் ஏற்பட சிறிது காலம் எடுக்கும் என்பதனை ஏற்றுக்கொள்ளுதல் முக்கியமானதாகும் . சட்டங்களானது ஒரு இரவினுள் ஏற்று அங்கீகரிக்கப்படவோ அல்லது உருவாக்கப்படவோ போவதில்லை அல்லது விழிப்புணர்வுப் பிரச்சாரங்களில் பங்குபற்றிய உடனேயே தனிநபர்கள் மாற்றங்களினை உண்டாக்குபவர்களாக மாறப்போவதுமில்லை .

# பிரச்சாரக் கதைகள் : #KeepItOn

வெற்றிகரமான ஒன்றிணைவுகளினை கட்டியெழுப்புவதில் நாங்கள் அவதானித்த இணைய முடக்க பிரச்சாரம் மற்றும் ஆய்வுப் பிரச்சினைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க வெற்றிகரமானதுகளில் Access Now னுடைய #KeepItOn பிரச்சாரமாகும் .இது 2016 இல் ஆரம்பிக்கப்பட்டு பல்வறுபட்ட நாடுகளில் இணைய முடக்கத்துக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் நடவடிக்கைகளினை மேற்கொண்டது .

குறித்த பிரச்சாரமானது அதனது பங்கில் வெற்றிகரமாகக் காணப்படுவது அதன் ஒன்றிணைவாலாகும்; குறித்த பிரச்சாரமானது உலகம் முழுதும் 105 நாடுகளில் தனது கூட்டிணைப்பினை கட்டியெழுப்பி பராமரித்து வருகின்றது, மற்றும் குறித்த நிறுத்தத்தால் பாதிப்படைந்தவர்களுடைய கதைகளினை பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு வழங்குவதில் கவனம் செலுத்துகின்றது . இது பல்வேறுபட்ட தரப்பினரை உள்வாங்குவதனை முன்னுரிமைப்படுத்துகின்றது , மற்றும் களமட்ட போராட்டம் , சட்டம் இயற்றுபவர்களது நேரடி ஈடுபாடு , தொழிநுட்ப உதவிகள் மற்றும் சட்ட நிவாரணிகள் போன்ற பல்வேறுபட்ட முன்னெடுப்புகளினை கட்டியெழுப்ப கூட்டிணைவிலுள்ள அங்கத்தவர்களினை உற்சாகப்படுத்தும் வகையாக குறித்த இந்த தொடர்புகளினை மூலோபாயமாகப் பயன்படுத்துகின்றது . குறித்த இந்த முன்னெடுப்புகளானது குறித்த பிராந்தியத்தினுடைய தேவைகளுக்கென வடிவமைக்கப்பட்டுள்ளன , எனினும் பெரிய பூகோள இலக்கு மற்றும் விபரிப்புடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது , மற்றும் குறித்த பிரச்சினையினை ஒத்திசைவான , சூழமைவான மற்றும் மேலும் நுணுக்கமானதாக ஆக்குகின்றது.

# பிரச்சாரக் கதைகள்: Digisec.directory

DDigisec.directoryஆனது தென்கிழக்காசிய மொழிகளில் காணப்படும் டிஜிட்டல் பாதுகாப்பு வளங்களினுடைய எண்ணிக்கையினை அதிகரித்தலை இலக்காகக் கொண்ட EngageMedia'உடைய உள்ளூர்மயப்படுத்தல் செயற்றிட்டத்துக்கு கிடைக்கப்பெற்ற பங்களிப்பின் மூலம் உருவாக்கப்பட்ட திறந்த மூலவள திட்டிகிட்டாள் பாதுகாப்பு வழிகாட்டியாகும் . இது குறித்த பிராந்தியங்களில் காணப்படும் டிஜிட்டல் பாதுகாப்பு ஆபத்துக்கள் மற்றும் அவர்களது பணிகளில் காணப்படும் அபாயங்களினைக் கண்டறிந்து முகாமை செய்வதற்கு ஏற்றவகையில் சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் சமுதாயக் குழுக்களினை வலுவூட்டிடவும் எத்தனிக்கின்றது . குறித்த வழிகாட்டியானது முன்னணி பிரயோகங்களுக்கான உரிமைகளினை மதிக்கின்ற மாற்றீடுகளாக காணப்படுகின்ற திறந்த -மூலவள டிஜிட்டல் பாதுகாப்பு கருவிகளினுடைய பட்டியலினையும் உள்ளடக்கியுள்ளது . இது ஆங்கிலம் மற்றும் பஹாசா இந்தோனேசிய மொழிகளில் காணப்படுவதுடன் விரைவிலேயே பர்மீஸ், பிலிப்பினோ,க்மெர் மற்றும் தாய் போன்ற மொழிபெயர்ப்புகளும்

இந்த பிரச்சாரமானது உள்ளூர் மயமாக்கலில் அதனது கவனம் மற்றும் திறந்த- வள மாதிரி போன்றவற்றினைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது . இந்த இரு கொள்கைகளினையும் கொண்டு காணப்படுவதனால், அனைவரும் இந்த கருவிகளைனைக் கொண்டு அறிவினை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் குறித்த அகராதிக்கு மேலும் விடயங்களினை பங்காளிப்பதற்கும் அனுமதிக்கின்றது . என்றும் வளரக்கூடிய மூல வளங்களுடன் இது பரந்தளவில் சென்றடையவும் அனுமதிக்கின்றது.



# தாக்கத்தினை அளவிடுவதற்கான ஒரு நினைவூட்டல்

நினைவிற் கொள்ளுங்கள் : தாக்கமானது காலம் தாழ்த்தி ஏற்படலாம், குறிப்பாக எமது போராட்டமாகிய திறந்த ஒரு இணையத்துக்கான சட்டங்களானது ஒரு இரவுக்குள் உருவாக்கப்படாவோ அல்லது உள்ளவங்கப்படவோ அல்லது விழிப்புணர்வு செயற்பாடுகளில் பங்குபற்றுயவுடனே ஒரு தனிநபர் உடனடி மாற்றத்தை உண்டாக்குபவராகவோ மாறப்போவதில்லை . இச்ச்செயல்முறை முழுவதும் உறுதியாக இருப்பதும் இறுதியான இலக்கில் கவனம் செலுத்துவதும் இங்கு முக்கியமான விடயமாகும்.

உங்கள் மேல் கனிவாய் இருங்கள்

EngageMedia.org/
Greater-Internet-
Freedom